# நவனின் நாடகங்கள்

CONNEMARA PUBLIC LIBRARY
53
-5 MAR 1985
MADRAS

எஸ். நவராஜ் செல்லையா
M.A. D.P E. (M.P.Ed)

REFERENCE

சாந்திமலர் பதிப்பகம்
46, ரெங்கநாதன் தெரு.
தி. நகர்... சென்னை-600017

339373

உரிமை ஆசிரியருக்கே

வெளியீடு எண் : 6

முதற்பதிப்பு : ஜனவரி, 1979,

---

**விலை ரூபாய் 3-50**

---

நண்பர்கள் அச்சகம்

சென்னை – 600018.

894.8112637

NAV

REFERENCE

REFERENCE

CONNEMARA PUBLIC LIBRARY
-5 MAR 1985
MADRAS

# முன்னுரை

பத்து நிமிடங்கள், பதினைந்து நிமிடங்கள் என்கிற கால அளவில், நடிக்கப் பெறுகின்ற ஓரங்க நாடகங்களின் தொகுப்பே, நவனின் நாடகங்கள் எனும் தலைப்பில் நூலாக வெளிவந்திருக்கிறது.

அனைத்து நாடகங்களும் சென்னை வானொலியில் சிறுவர் நிகழ்ச்சியிலும் சென்னை தொலைக்காட்சி நிலையத்தின் கண்மணி பூங்கா நிகழ்ச்சியிலும் அரங்கேற்றப்பட்டவைகளாகும். அதன் பின், பல பள்ளிகளில் இந்நாடகங்கள் பலமுறை மாணவ, மாணவிகளால் நடிக்கப்பெற்றும் இருக்கின்றன.

மாணவ மாணவிகளுக்கென்று, அவர்தம் ஆர்வம், நடிப்பாற்றல், உணர்ச்சி இவற்றையே அடிப்படையாக வைத்து, நல்லொழுக்கத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தின் மேன்மையை விளக்கிடும் வகையிலே, இந்நாடகங்கள் எழுதப் பட்டிருக்கின்றன.

நாடகங்களை எவ்வித சிரமமுமின்றி நடத்தவும், எளிதாகப் பேசவும், விருப்பத்துடன் நடிக்கவும் கூடிய

வகையிலே தான் அமைந்திருக்கின்றன. பத்தாண்டு காலம் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுடன் பழகவும், படிப்பித்துத் தரவும், அவர்களுக்கு நாடகம் எழுதி நடிப்பினைக் கற்றுத்தரவும், கூடிய வாய்ப்பினை நான் பெற்றிருந்ததால்தான், இத்தகைய ஓர் இனிய முயற்சியில் என்னால் ஈடுபட முடிந்தது.

முதல் வகுப்பிலிருந்து முதுகலை வகுப்பு வரையிலும் (L K.G. to M.A.), மற்றும் தொழிலாளர்களுக்கும் நாடகக் கலையில் விருப்பத்துடன் நடிக்க வந்தவர்களுக்கும் நாடகங்கள் எழுதி, இயக்கி, தயாரித்து மேடையேற்றிய என் அனுபவங்களே இந்நூலை நல்ல முறையில் எழுதிடத் துணை புரிந்துள்ளன.

ஏற்கனவே, நல்ல நாடகங்கள் என்னும் எனது நூல் வெளியாகி, பரபரப்புடன் விற்பனையாகியதைக் கண்டு, தொடர்ந்து நான் எழுதிய நாடகங்களே இப்பொழுது நூல் வடிவம் பெறுகின்றன.

விளையாட்டுத் துறையில் நான் நூல்கள் எழுதிக்கொண்டு இருந்த பொழுதும்கூட, நாடகத்துறையில் இருந்த என் ஆர்வத்தைக் கண்டு, எனது இனிய அன்புக்குரிய நண்பர் திரு வெ. நல்லதம்பி M A. அவர்கள், வானொலியில் சிறுவர் நிகழ்ச்சிக்கும், தொலைக் காட்சியில் கண்மணிப் பூங்கா நிகழ்ச்சிக்கும் நாடகங்கள் எழுதிடத் தூண்டி, உற்சாசத்துடன் வாய்ப்பளித்திராவிட்டால், இந்நூல் இன்று வெளிவந்திருக்க முடியாது.

இத்தகைய அரிய பணியை நிறைவேற்றுமாறு எனக்குப் பல்லாற்றுனும் உதவி புரிந்த நண்பர் நல்லதம்பி அவர்களுக்கு, என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாய்ப்பினை நல்கிய சென்னை வானொலி நிலைய இயக்குநர் அவர்களுக்கும், சென்னை தொலைக் காட்சி நிலைய இயக்குநர் அவர்களுக்கும் என் இதயங்கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடக நூல்கள் நிறைய வெளி வரவேண்டும் என்ற ஆர்வத்தில் சாந்தி மலர் பதிப்பகத்தார், இந்நூலை வெளியிடு

கின்றார்கள். ஏற்கெனவே, மாணவர்க்கேற்ற மேடை நாடகங்கள் எனும் நாடக நூல் வெளிவந்து விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

எனது நூல்களை இதுகாறும் வாங்கிப் படித்து பயன்பெற்று ஆதரித்தும், அன்பு காட்டியும், மேலும் எழுதுமாறு உற்சாகம் தந்தும் உதவிடும் நண்பர்கள் அனைவருக்கும் என் அன்பு கலந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஞானமலர் இல்லம்
சென்னை—600017

எஸ். நவராஜ் செல்லையா

-5 MAR 1985
MADRAS

# சாந்தி மலர் பதிப்பகத்தின் வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | நல்ல நாடகங்கள் | 2 | 25 |
| 2. | மாணவர்க்கேற்ற மேடை நாடகங்கள் | 3 | 75 |
| 3. | நவனின் நாடகங்கள் | 3 | 50 |
| 4. | நவரச நாடகங்கள் | 5 | 50 |
| 5. | கடவுள் கைவிடமாட்டார் | 2 | 00 |
| 6. | பண்பு தரும் அன்புக் கதைகள் | 2 | 00 |
| 7. | சிங்காரக் கதைகள் | 1 | 50 |
| 8. | தேடி வந்த தெய்வம் | 3 | 00 |
| 9. | சாந்தி தமிழ் வாசகம் | 2 | 00 |
| 10. | Santhi's A B C Book | 2 | 00 |

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் செயல் முறைகள்
சென்னை-6.
ப.மு. எண் 141344/77 நாள் 22—7—1977

| | | | |
|---|---|---|---|
| 11. | நன்னெறிக் கல்வி (ஒன்பதாம் வகுப்பு) | 2 | 25 |
| 12. | நன்னெறிக் கல்வி (பத்தாம் வகுப்பு) | 2 | 25 |

CONNEMARA PUBLIC LIBRARY
-5 MAR 1985
MADRAS

# படைப்பு

எனது இனிய நண்பர்

**திரு. வெ. நல்லதம்பி M.A.**

அவர்களுக்கு

'நவன்'

5 MAR 195
MADRAS

# உள்ளே ..


| | | |
|---|---|---|
| 1. | நீ ராஜா தான் | 9 |
| 2. | நல்ல பாதை | 25 |
| 3. | சுதந்திரம் | 41 |
| 4. | வேடிக்கை | 59 |
| 5. | அவசரம் | 77 |
| 6. | மனிதருக்குத் தோழன் | 91 |

# நீ ராஜாதான்!

CONNEMARA PUBLIC LIBRARY
-5 MAR 1985
MADRAS



MARA PUBLIC LIBRARY
MAR 1985
MADRAS

# கதை மாந்தர்கள்

மோகன்

ராஜா

சாந்தி

அம்மா

அப்பா

கடை பையன்

MADRAS

## காட்சி 1

**இடம் :** விளையாட்டு மைதானம்

**காலம் :** மாலை

[மோகன் ஒரு புது கிளி பொம்மையை வைத்து அழகு பார்த்துக்கொண்டு இருக்கிறான். அப்பொழுது ராஜா அங்கே வருகிறான்.]

**மோகன் :** ராஜா! இந்த பொம்மைய பார்த்தியா? இதுக்கு சாவி கொடுத்தா கத்தும், தத்தும், பேசும், ஓடும்.

**ராஜா :** ஆகா! ரொம்ப அழகா இருக்கே. மோகன்! அதை என் கையில கொடுடா. ஒரு தடவை தொட்டுப் பார்த்துட்டுத் தந்துடுறேன்.

**மோகன் :** கண்ணுல மட்டும் பார்த்துக்கோ. கையிலே தரமாட்டேன். தரவே மாட்டேன்! எங்க அப்பா என்னை கொன்னுடுவாரு.

**ராஜா :** தரமாட்டேன்னு சொல்லத் தெரியுது. அப்புறம் ஏண்டா என்கிட்டே பொம்மைய கொண்டு வந்து காட்டுறே?

**மோகன் :** இது அதிசயமான பொம்மைடா. எனக்கே எனக்குத்தான் இது சொந்தம். ஆனா, நீ என்னோட ஃபிரண்ட் இல்லே! அதனாலே தான் ஓடோடி வந்து உன்கிட்ட காட்டினேன்.

**ராஜா :** மோகன்! உன்னோட பேசும் கிளி ரொம்ப ஜோரா இருக்குடா. ஒரு தடவை கொடு. ஒரே தடவைதான். பூ மாதிரி தொட்டுப் பார்த்துட்டு, பொன்னுட்டம் திருப்பிக் கொடுத்துடறேன்.

**மோகன் :** நான் மாட்டேன்பா. கீழே விழுந்தா உடைஞ்சுடும்.

**ராஜா :** அப்படி கீழே விழுந்து உடைஞ்சுட்டா, அதுக்கு வேண்டிய காசை உனக்குக் கொடுத்துடறேன். மோகன்! குடுடா! பத்திரமா பார்த்துக்குறேன். ரொம்ப ஆசையா இருக்குதுடா! பிளீஸ்...பிளீஸ்...

**மோகன் :** ராஜா! நீ கெஞ்சுறதை பார்த்தா எனக்கு பாவமா இருக்கு. மனசும் கஷ்டமாதான் இருக்கு. இருந்தாலும் நான் தரமாட்டேன்.

**ராஜா :** தரமாட்டியா! அப்புறம் நான் அழுவேண்டா.

**மோகன் :** நீ அழுதா பரவாயில்லே. நான் தரமாட்டேன்!

**ராஜா :** நான் உனக்கு டுவிட்டுடுவேன். உன் பேச்சுக்குக் காய் விட்டுடுவேண்டா.

**மோகன் :** எனக்கு ஒன்னும் கவலையில்லே.

**ராஜா :** நாம ரெண்டு பேரும் ஃபிரன்ட்ஸ் இல்லியாடா.

**மோகன் :** ஆமா.

**ராஜா :** ஒரே வகுப்பில தானே படிக்கிறோம்! ஒரே பெஞ்சுலே தானே உட்கார்ந்திருக்கோம்!

**மோகன் :** ஆமா ஆமா.

**ராஜா :** எப்பவும் ஒன்னுதானே விளையாடுறோம்!

**மோகன் :** ஆமா! ஆமா! ஆமா!

**ராஜா :** எல்லாத்துக்கும் ஆமா போடுறே. அந்த பொம்மைக் கிளியை கேட்டா மட்டும் இல்லேன்னு சொல்றியே?

**மோகன் :** அதுலதான் ரகசியம் அடங்கியிருக்கு.

**ராஜா :** அது என்னடா ரகசியம்.

**மோகன் :** உனக்கும் இதுமாதிரி ஒரு பொம்மைக் கிளி இருந்து, அதையும் நீ ஆசையா வச்சிருந்து, நான் கேட்டா கொடுப்பியா?

**ராஜா :** நான் நிச்சயமா கொடுப்பேன். உன்னை மாதிரி எச்சத்தனமா இல்லேன்னு சொல்லமாட்டேன்.

**மோகன் :** நிச்சயமா நீயும் இல்லேன்னுதான் சொல்லுவே!

**ராஜா :** சத்தியமா நான் சொல்ல மாட்டேன்...

**மோகன் :** நீ நல்ல பையன்தான். இல்லேன்னு சொல்ல மாட்டேதான். அப்படின்னு, இந்த மாதிரி ஒரு பொம்மைக் கிளியை நீயும் காசு கொடுத்து வாங்கிக்கோ. அப்புறம் நீ எப்படின்னு பார்க்கலாம்.

**ராஜா :** பெரிய பொம்மை! மண்ணுங்கட்டி! இது என்னடா விலையிருக்கும்.

**மோகன் :** 4 ரூபாய்.

**ராஜா :** 4 ரூபாயா?

**மோகன் :** என்னடா! 4 ரூபாய்ன்னு சொன்னதும்அசந்து போயிட்டே. கையில காசு இல்லே. ஆனா பேச்சு மட்டும் ரொம்ப இதுவா இருக்கே.

**ராஜா :** பேச்சு மட்டும் இல்லேடா. இன்னும் ரொம்ப அழகான பொம்மையா, இதைவிட உசத்தியாவே வாங்கி வந்து காட்டுறேன் பாரு.

**மோகன் :** உன்னாலே எப்படி வாங்க முடியும்?

**ராஜா :** டேய் மோகன்! நாளைக்கு சாயங்காலம், இதே நேரத்துல, பொம்மையோட வந்து உன் முகத்துலே வீசி எறியலே, என் பேரு ராஜா இல்லே.

**மோகன் :** வாங்கிட்டு வரலே, உன்னை கூஜான்னு கூப்பிடுவேன்; சரிதானே.

**ராஜா :** சரிதாண்டா! இப்பாவாவது கொடுடா.

**மோகன் :** மாட்டேன்! மாட்டேன்! மாட்டேன்! நான் போறேன்.

**ராஜா :** போடா போ! என்கிட்டே ரெண்டு ரூபாய் இருக்கு. இன்னும் ரெண்டு ரூபாய்தானே! எப்படியும் கிடைக்கும். கிடைக்காமலா போகும். டேய் மோகா! மொச்சைக்கொட்டை மூக்கா! கொடைமுளகாய் கண்ணு! உன் முகத்துலே அடுப்புக் கரியை பூசறேன் பாரு.

## காட்சி 2

**இடம் :** வீடு **காலம் :** *மாலை*

**உள்ளே :** *ராஜா, அம்மா, சாந்தி*

[புத்தகம் படிப்பதுபோல் உட்கார்ந்த படி, ராஜா ஏதோ சிந்தனை செய்த வண்ணம் இருக்கிறான். அவனுடைய அம்மா வந்து நிற்பதும் தெரியாமல் இருப் பதைப் பார்த்ததும், அம்மா அருகில் வந்து நிற்கிறாள்.]

**அம்மா :** ராஜா! புத்தகம் பிரிச்ச மாதிரியே இருக்கு. என்னப்பா யோசனை எழுத்தைப் பார்த்துப் படி.

ராஜா : படிச்சுகிட்டு தானேம்மா இருக்கேன். எழுத்தெல்லாம் பெரிசாயிருக்கு. புரியமாட்டேங்குது.

அம்மா : ஏதோ பகல் கனவு கண்டுகிட்டு இருக்குற. எனக்கு அப்படித்தான் தோணுது. நானும் ரெண்டு நாளா பார்க்குறேன். நேற்று சாயங்காலத்துலே யிருந்து ஒரு மாதிரியாவே இருக்குகிற. இப்படி வா! உடம்புக்கு ஏதாவது...

ராஜா : ஒன்னுமில்லேம்மா!

அம்மா : உனக்கென்ன தெரியுது. வெயில்லே அலையாதே! வீதியிலே விளையாடாதே! கண்டதையும் வாங்கிச் சாப்பிடாதேன்னு சொன்னா புரியுதா? இப்ப பாரு, உன் உடம்பு சுடுது.

ராஜா : எனக்கு ஒன்னும் இல்லேம்மா. அம்மா! நான் ஒன்னு கேட்கிறேன்!

அம்மா : எதையாவது நீ கேட்டுகிட்டே இருப்பே. பேசாம படி. பரீட்சை கிட்ட வந்திடுச்சு.

ராஜா : பாடமெல்லாம் தெரியும்மா! அம்மா! எனக்கு ஒரு பொம்மை வேணும்.

அம்மா : ஒழுங்கா படி. லீவு விட்டதும் பார்ப்போம்.

ராஜா : எனக்கு ரொம்ப அவசரமா வேணும். ஹூம்.

அம்மா : அடம் பிடிக்காமே படி. உங்க அப்பா வர்ர நேரமாச்சு. நான் போய் காபி டிபன் தயார் பண்ணனும். கொஞ்ச நேரம் உட்கார்ந்துபடி, அப்ப தான் அப்பா மனசு சந்தோஷப்படும். வர்றேன்.

ராஜா : அப்பா மனசு சந்தோஷப்படும். அதுக்கு நான்தான் எல்லாம் செய்யணும். என் மனசு சந்தோஷப்பட, ஒருத்தரும் ஒன்னும் பண்ணமாட்

டாங்க. ஆகா! அழகான பொம்மை! சாவி கொடுத்தா கத்தும், பேசும், ஓடும். இன்னைக்குள்ளே பொம்மை வாங்கனுமே. எப்படி பணம் சேர்க்குறது?

(தனக்குள் பேசிக் கொள்கிறான்)

**சாந்தி :** பாடத்தைப் படின்னு அம்மா சொல்லிட்டுப் போறாங்க. நீ என்னடான்னா, பணம் எப்படி சேர்க்குறதுன்னு பாராயணம் பண்ணிக்கிட்டு இருக்குறே! நீ என்ன, வியாபாரம் பண்ணப்போறியா?

**ராஜா :** சாந்தி! நீ பேசாம போ.

**சாந்தி :** நான் உன் அக்கா. கோபப்படாதேடா.

**ராஜா:** ஆமா சாந்தி. நீ எனக்கு ஒரு உதவிபண்ணனும். கோபமா பேசிட்டேன்...தப்பு...தப்பு...வேணும்னா தோப்புக்கரணம் போடறேன்.

**சாந்தி:** என்னப்பா ஐஸ் வைக்குறே! விஷயத்தை சொல்லு. முடியுமான்னு பார்க்கிறேன்.

**ராஜா :** எனக்கு ரெண்டு ரூபாய் வேணும்.

**சாந்தி :** பால் வேண்டாங்குற பூனை, உலகத்துல இருந்தாலும் இருக்கும். பணம் வேண்டாங்குற மனுஷன், உலகத்துல யாரும் இருக்க மாட்டாங்க போலிருக்கே!

**ராஜா :** என் கஷ்டம் தெரியாம பேசுறே சாந்தி! உனக்கு எப்பவும் கேலியும் கிண்டலுந்தான். இப்படின்னா, நான் உன்கிட்ட இதை சொல்லி இருக்கவே மாட்டேன்.

**சாந்தி :** படிக்க ஆரம்பிச்சா, பாடம்தான் நினைவுக்கு வரனும். பணம் வரலாமா?

ராஜா : பாழாபோன கிளி பொம்மை, என் கண்ணை பறிக்குதே. ஆசையா இருக்குதே. அப்புறம் நான் எப்படி படிக்க முடியும்?

ாந்தி : முதல்ல நீ படிச்சு முடி. அப்புறந்தான் கிளி பொம்மை!

ாஜா : எனக்குன்னு ஒரு கிளி பொம்மை வாங்கணும். இல்லே, அந்த கொடைமுளகாய் கண்ணனுடைய பொம்மையை வாங்கி உடைக்கணும். அப்பத்தான் என் ஆத்திரம் அடங்கும்.

சாந்தி : ஒன்னும் புரியலியேடா.

ராஜா : என் கிளாஸ்ல படிக்கிருனே மோகன். ஏதோ பெரிய அதிசயமா, பொம்மைக் கிளி வச்சிருக்காணும். என்கிட்ட கொண்டு வந்து காட்டி. பெரிசா பீத்திக்கிட்டான்.

சாந்தி : ஆமா ராஜா! என்கிட்டகூட வந்து காட்டி, கண்ட மாதிரி கலாட்டா பண்ணிஞன்.

ராஜா : நீ அசடு! தாங்கிகிட்டே...என்ஞலே முடியலியே! இன்னேக்குள்ளே, எப்படியாவது, அந்த மாதிரி கிளியை வாங்கிக்கொண்டு போகலே, நான் ராஜா இல்லே! கூஜா தான்.

சாந்தி : ராஜா கவலைப்படாதே! மோகனுக்காக நீ பரீட்சையில பெயில் ஆயிடக்கூடாது. உனக்கு கிளி வாங்கப் பணந்தானே வேணும்! நான் ஏற்பாடு பண்றேன். கவலைப்படாதே!

ராஜா : எனக்கு சமாதானம் சொல்றியா நீ! வாயிலே சொல்லிட்டே தாராளமா! கேட்க நல்லா இருக்குது! காரியத்திலே நடக்குமா?

சாந்தி : அதோ கேளு! அம்மா கூப்பிடுற சத்தம்! கேட்குதா?

அம்மா : சாந்தி! ராஜா! காபி சாப்பிட வாங்க.

சாந்தி : இதோ வந்துட்டேம்மா! (மெதுவாக) ராஜா! உனக்கு எவ்வளவு பணம் வேணும்?

ராஜா : என்கிட்டே 2 ரூபாய் இருக்குது. இன்னும் ரெண்டு ரூபா தான் வேணும்.

சாந்தி : 2 ரூபாயா! சரி வா போகலாம்.

ராஜா : அக்கான்னு நம்புறேன். அம்போன்னு விட்டுடாதே!

(இருவரும் வீட்டின் உள்ளே போகிறார்கள். அவர்களது அப்பா அடுத்த அறையில் இருந்து உள்ளே வருகிறார்.)

அப்பா : (கோபமாக) சாந்தி! ராஜா! இரண்டு பேரும் இங்கே வாங்க.

ராஜா : ஏன்பா! இதோ வந்துட்டோம்!

சாந்தி : அப்பா! அம்மா காபி தரச் சொன்னாங்க.

அப்பா : பேசாம காபியை அங்கே வை.

சாந்தி : காபி ஆறிப் போயிடும்பா. காபி சூடா இருக்குதுப்பா!

அபபா : நானே சூடாத்தான் இருக்கேன். இப்ப ரெண்டு பேரும், முதல்ல உண்மையைச் சொல்லணும். 5 நிமிஷத்துக்கு முன்னால என் மேஜை மேலே பத்து ரூபாய் நோட்டை ஒத்தை ஒத்தை ரூபாவா மாத்தி வச்சிருந்தேன். பாத்ரூம் போயி, முகம் கழுவிக்கிட்டு வர்ரதுக்குள்ளாற, ரெண்டு ரூபாயைக் காணோம் எங்கே போச்சு அந்த ரெண்டு ரூபாய்?

சாந்தி : எனக்குத் தெரியாதுப்பா!

ராஜா : நான் பார்க்கவே இல்லேப்பா! நான் பாடம் படிச்சுக்கிட்டுதான் இருந்தேன்.

அப்பா : பணத்துக்கு கால் முளேச்சி ஓடிப்போச்சா? நீங்க ரெண்டு பேரும் எடுக்கலேன்னு, வெளியில யிருந்து, திருடன் வந்திருந்தா, எல்லா பணத்தையு மில்லே எடுத்துக்கிட்டு போயிருப்பான்? ரெண்டு ரூபாய் மட்டும்தான் குறையுது. உண்மையை சொல்லிடுங்க. பொய் சொன்னு, உங்க ரெண்டு பேரையும் உதைச்சே கொண்ணுடுவேன்.

சாந்தி : நான் ஏன்பா பணத்தை எடுக்கிறேன்?

அப்பா : அப்ப, ராஜா தான் எடுத்திருக்கணும். ராஜா! இந்தப் பக்கம் வா. ஒழுங்கா உண்மையை சொல்லு! நான் உன்னே அடிக்க மாட்டேன்.

ராஜா : நான் எடுக்கவே இல்லேப்பா! எடுத்தாத்தான் சொல்லிடுவேனே!

அப்பா : மரியாதையா சொல்றேன்.

ராஜா : (பயந்து) அப்பா! நான் நிச்சயமாஎடுக்கலேப்பா!

அப்பா : உன்னே எனக்கு நல்லா தெரியும்டா! பள்ளிக்கூடத்தில ஐஸும், மாங்காயும், சாக்லேட்டும் வாங்கி சாப்புடுறதுக்காக, நீ காசை தெரியாம எடுத்துக்கிட்டு போறேன்னு உங்க அம்மா அடிக்கடி ரிப்போர்ட் செய்வா! அப்ப நான் நம்பலே. இப்பநம்பறேன். சாந்தி இப்படி வா. நம்ம வீட்டில யார் யார் இருக்குரு?

சாந்தி : நான், ராஜா, அம்மா, நீங்க.

அப்பா : நம்ம நாலு பேரையுந் தவிர, வீட்டில் வேறு யாருமே இல்லே. நான் எடுக்கலே. அம்மாவும் எடுக்கலே. அவ எடுக்கமாட்டா. அதனுல, நீங்க ரெண்டு

பேருந்தான் அல்லது, ரெண்டுபேருலே ஒருத்ததான் எடுத்திருக்கணும். இன்னும் ஒரு நிமிஷம் டைம் தர்றேன். சொல்லிடுங்க. தைரியமா நான்தான் எடுத்தேன்னு சொன்ன, உங்களை ஒண்ணும் பண்ணாமே விட்டுடறேன்.

ராஜா : சாந்தி! நீ எடுத்திருந்தா கொடுத்துடு. இல்லேன்னா நானும் அடி வாங்கனுமே.

சாந்தி : எனக்கு பணம் வேணும்னா, அப்பாவை கேட்டா அவரே கொடுத்துடுவாரே! நீ தானே பொம்மைக் கிளி வாங்கணும்னு துடிச்சே.

ராஜா : நீதானே பணம் எடுத்து தர்ரேன்னு சொன்னே! பணத்தை எடுத்துக்கிட்டு என் மேலயே பழி போடு றியா?

சாந்தி : உனக்கு உதவி செய்யுறேன்னுதானே சொன் னேன்!

அப்பா : உதவி செய்யுறேன்னு சொன்னியா? உனக்கு எவ்வளவு திமிர் இருந்தா அப்படி சொல்லியிருப்பே!

(அடிக்கக் கை ஓங்குகிறார்.)

சாந்தி : (பயந்தபடி) அப்பா! நான் எடுக்கலேப்பா! நான் எடுக்கலே! ராஜா தான் 2 ரூபாய் வச்சிருந்தான். அதுதான் எனக்குத் தெரியும்.

அப்பா : அப்படியா! டேய் ராஜா! வாடா இங்கே! கொண்டு வா அந்த ரெண்டு ரூபாயை.

(அடிக்க முயல்கிறார். அவன் பயந்து ஒதுங்குகிறான்.)

ராஜா : அப்பா இனிமேல் எடுக்கமாட்டேன்! அப்பா! இனிமே எடுக்கமாட்டேன்.

அப்பா : பொய்யா சொல்றே! திருட்டுவேலையா பண்றே! சாந்தி! உங்க அம்மாவை கூப்பிடு.

அம்மா : என்னங்க! ஏன் சாந்தியும்ராஜாவும்அழறுங்க.

அப்பா : எல்லாம் உன்னாலதான். நீ கொஞ்சம் கண்டிப்பா இருந்தா இப்படியெல்லாம் நடக்குமா?

அம்மா : எனக்கு ஒன்னும் புரியலிங்களே.

அப்பா : குழந்தைகளுக்கெல்லாம் சமைச்சு போடுறது மட்டும், தாயோட கடமை இல்லே, அவங்களை நல்லாவும் வளர்க்கணும், அதுதான் தாயோட கடமை.

அம்மா : அப்படி என்ன அக்ரமம் நடந்துடுச்சு நம்ப வீட்டிலே! காய்கறி வாங்கப் போய்ட்டு வர்ரதுக்குள்ளே ஏக சத்தமா இருக்குதே?

அப்பா : ஆமா! பொய், திருட்டு எல்லாம் உன் புள்ளைங்க கத்துக்கிட்டாச்சு. என்னோட மானமே போருப்புலதான் இருக்கு. சே! உங்க முகத்திலயே விழிக்கக் கூடாது.

அமமா : கொஞ்சம் கோபமில்லாமதான் சொல்லுங்களேன்! எனக்கு ஒன்னும் புரியலே!

அப்பா : நான் வச்சிருந்த 2 ரூபாயைக் காணோம். யாரோ திருடிக்கிட்டாங்க.

அம்மா : நான் தான் உங்க பாக்கெட்டுல இருந்து 2 ரூபாய் எடுத்தேன்.

சாந்தி : பார்த்திங்களா அப்பா! நாங்க பணத்தை எடுக்கவே இல்லே!

அப்பா : என் பேண்ட் பாக்கெட்டுல ஏது பணம்?

அம்மா : அழுக்கு பேன்டை துவைக்க எடுத்தபோது இருந்தது. அதுலதான், நான் காய்கறி வாங்கப் போனேன்.

**அப்பா :** அந்தப் பணம் இல்லே. இதோ ராஜா எடுத்திருக்கான். இந்த ரூபாய்தான்.

**ராஜா :** இதை நான் மேஜையிலிருந்து எடுக்கலே! அப்பா! உங்க பழைய புஸ்தகங்களை புரட்டிப் பார்த்துக்கிட்டிருந்தேன். அதிலே தான் இந்த ரெண்டு ரூபாய் இருந்தது.

**சாந்தி :** அம்மா எடுத்த ரெண்டு ரூபாய் இல்லே! ராஜா எடுத்த 2 ரூபாயும் இல்லே! வேறு ஏது புதுரூபாய்?

**அப்பா :** இப்போ நான் கொண்டு வந்த ரூபாய்?

**அம்மா :** நல்லா தேடிப் பாருங்க. ஞாபகமறதியா எங்கேயாவது வச்சிருப்பீங்க. எங்கே போனீங்க, எங்கே நின்னிங்க, எங்கே வச்சிருக்கலாம்னு யோசனை பண்ணுங்களேன்.

**அப்பா :** இப்பொ ஞாபகமறதின்னு சொல்றே. இன்னும் கொஞ்சநேரம் போனா, என்னை அரைலூஸ் ஸுன்னு கூட சொல்லுவே போலிருக்கு. இந்த மேஜைமேலதான் வச்சுட்டு, போய் முகம் கழுவுறதுக்குள்ளாறெ பணம் பறந்தே போச்சே.

**ராஜா :** அப்பா! தப்பு தாம்பா! இனிமே இதுமாதிரி பண்ணலேம்பா!

**சாந்தி :** இனி பொய்யே பேசமாட்டேம்பா.

**அம்மா :** பணத்தை நான் தேடித்தர்ரேங்க வாங்க.

**அப்பா :** முடியாது! எனக்கு மனசே சரியில்லே! வர்ரேன்! வெளியே புறப்படுகிறார்.

*(வாசலில் ஒரு பையன் வந்து நிற்கிறான். அவனைப் பார்த்துவிட்டு)*

யாரு தம்பி நீ! என்ன வேணும் உனக்கு?

**பையன் :** சார்! உங்களை பார்க்கத்தான் சார் வந்தேன்

**அப்பா :** யாரப்பா நீ? உனக்கு என்ன வேணும்?

**பையன் :** நான் மளிகைக் கடையிலே வேலே செய்யுற பையன். முதலாளிதான் என்னே அனுப்பி வச்சாரு!

**அப்பா :** போயிட்டு அப்புறமா வாப்பா.

**பையன் :** சார்! பத்து ரூபாய்க்கு சில்லறை கேட்டிங்களாம். எங்க முதலாளி எட்டு ஒத்தை ரூபாய் நோட்டா கொடுத்துட்டு மீதி ரெண்டு ரூபாயை தேடுறதுக்குள்ளாற நீங்க வந்துட்டிங்களாம். உடனே கூப்பிட்டாராம். நீங்க காதுல கேட்காம வேகமா வந்துட்டதிஞல, இப்ப என்னே அனுப்பி வச்சாருங்க.

**அப்பா :** சரி! கொண்டா! நீ போகலாம்.

(பையன் போகிருன்.)

**அம்மா :** என்னங்க இது?

**அப்பா :** கடையிலேயே ரூபாய் காணும போயிருக்குது. எப்படி இருக்கு, கடை முதலாளி யோக்கியதை.

**அமமா :** கண்ட இடத்துல ரூபாயைபோடுற மாதிரி கண்டவங்களேயும் ஏன் இப்படி குறை சொல்றீங்க?

**சாந்தி :** பழைய புஸ்தகத்துல ரூபாய் நோட்டு.

**ராஜா :** பேண்ட் பாக்கெட்டுல ரூபாய் நோட்டு.

**அம்மா :** எந்த இடமுன்ஞலும் நீங்க பணத்தை வச்சிடுறீங்க. வீட்டுல பணம் கிடந்து கண்ணில பட்டா, அதை எடுக்கத்தான் தோணும்.

**அப்பா :** கண்ணுக்குத் தெரியுற மாதிரி காசு இருந்தா உடனே எடுத்திரணுமா.

**அம்மா :** அப்படி இல்லீங்க! பணத்தை பத்திரமா, பாதுகாப்பா தான் வைக்கணும். பிள்ளேங்களுக்கு எதையாவது வாங்கணும், சாப்பிடணும்னு ஆசை இருந்துகிட்டுதான் இருக்கும். அதுவுமில்லாம

ஃபிரண்ட்ஸ்ங்க தூண்டுதல் வேற அப்பப்ப இருக்கும்.

அப்பா : கரெக்ட். அவசரத்துல கோபமா நடந்துகிட்டேன். ஆத்திரப்பட்டதுனால, தீர விசாரிக்க முடியலே. இனிமே கண்ட இடத்துல காசை வைக்க மாட்டேன்.

ராஜா : இனிமே நான், எந்த பொருளேயும் வாங்க முயற்சி பண்ணமாட்டேன்.

சாந்தி : பண விஷயத்தைப் பத்தி நான் பேசவே மாட்டேன்!

அம்மா : இதுபோல இனிமே இங்கே நடக்கவிடமாட்டேன்.

அப்பா : ராஜா, சாந்தி உங்களுக்கு எது வேணுமோ, உடனே அம்மா அப்பாகிட்ட தானே கேட்கணும். வாங்கித் தந்தா தான் வாங்கிக்கணும். புரியுதா! அதனுலேதான் உங்களுக்கு அடி, திட்டு. எனக்கும் கோபம்.

ராஜா : அப்பா!

அப்பா : என்ன ராஜா?

ராஜா : பொம்மைக் கிளி வேணும்பா! அதை நான் வாங்கிகிட்டுப் போகலேன்னு, என்னைக் கூஜான்னு கூப்புடுறேன்னு சொன்னுன் மோகன்.

அப்பா : வா கடைக்குப் போகலாம்: வாங்கித் தர்ரேன்.

ராஜா : சாந்தி! அம்மா! நான் கூஜா இல்லே! ராஜா தான்.

அப்பா : ஆமா! ராஜா. பொய் சொல்லாதவரைக்கும், திருடாத வரைக்கும், புத்திசாலியா படிக்கிற வரைக்கும், ரோஜா தான்! நீ ராஜா தான்.

(எல்லோரும் சிரிக்கின்றனர்.)

# நல்ல பாதை



# கதை மாந்தர்கள்

குமார்

மோகன்

அம்மா

தலைமை ஆசிரியர்

## காட்சி 1

**இடம் :** வீட்டின் முன் அறை.

**காலம் :** மாலை.

**உள்ளே :** குமார், மோகன், அம்மா.

(மோகன் எழுதிக்கொண்டு இருக்கிறான்.)

**குமார் :** மோகன் வா! விளையாட போகலாம். நேரமே ஆயிடுச்சு.

**மோகன் :** நான் வரலே. நிறைய வேலையிருக்கு.

**குமார் :** 'காலை எழுந்தவுடன் படிப்பு, மாலை முழுவதும் விளையாட்டு'ன்னு நம்ம பாரதியாரே பாடியிருக்கிறாரே. இப்ப என்ன படிப்பு. வா போகலாம்.

**மோகன் :** இல்லே குமார். எனக்கும் என் அப்பாவுக்கும் ஒரு போட்டி. அதனால்தான் நான் இப்படி முழு மூச்சா உட்கார்ந்து எழுதிகிட்டே இருக்கேன்.

**குமார் :** என்ன போட்டின்னு கேட்குறதுல்லே ஒன்னும் தப்பில்லையே!

**மோகன் :** தப்பே இல்லே! நான் என் அப்பாகிட்டே, ஒரு பழைய சைக்கிள் பள்ளிக்கூடத்துக்குப் போறதுக்கு வேணுமின்னு கேட்டேன். அவரோ என்னை அலட்சியப் படுத்துறமாதிரி...

**குமார் :** (அவசரத்துடன்) என்ன சொன்ரு?

**மோகன் :** அரையாண்டு தேர்வில, வகுப்பில் நீ முதல் மார்க் வாங்கு! பொங்கல் பரிசா உனக்கு புது சைக்கிளே வாங்கித் தர்றேன். அப்படின்னு சொல்லிட்டாரு.

**குமார் :** புது சைக்கிளா! பலே! பலே! நீ கேட்டதோ பழைய சைக்கிள். வரப்போறதோ புது சைக்கிள். உனக்கு லாபம் தானே.

**மோகன் :** இலாபத்துக்கு முன்னே, அப்பா சொன்ன கருத்தைக் கவனிக்கணும். என்ருல முதல் மார்க்கு வாங்க முடியாதுன்னு அப்பாவோட நம்பிக்கை.

**குமார் :** கால் ஆண்டுத் தேர்விலேயும் நீதானே முதல் மார்க்கு.

**மோகன் :** அதை என்னேட அதிர்ஷ்டம்ன்னு அப்பா சொல்ருரு.

**குமார் :** அதுக்கும், நீ இப்ப உட்கார்ந்து எழுதறதுக்கும், என்ன சம்பந்தம் இருக்கு?

**மோகன் :** இருக்கு குமார். எல்லா பாடத்திலேயும் வருகின்ற அத்தனை முக்கிய கேள்விகளுக்கெல்லாம், பதிலை எழுதி, பத்திரமா வச்சுக்கப் போறேன். அப்புறம், முழுதையும் மனப்பாடம் பண்ணப் போறேன்.

**குமார் :** அப்போ, இனிமே நீ விளையாடவே, வரமாட்டியா?

**மோகன் :** ஏன்? இன்னும் ரெண்டு நாள்லயே இந்த வேலை முடிஞ்சுடும். அதுக்குப் பிறகு, கவலையே யில்லே. விளையாட்டுக்கு விளையாட்டு. மார்க்குக்கு மார்க்கு. பரிசுக்குப் பரிசு. எப்படி என் திட்டம்?

**குமார் :** மோகன்னு மோகன் தான். சரி மோகன், நானும் உன்னை மாதிரி படிக்கப் போறேன்.

**மோகன் :** உனக்கும் ஏதாவது பரிசு கிடைக்கப் போகுதா?

**குமார் :** ஆமாம். என் அப்பா எனக்கு பரிசா...குடுப்பாரு! உதைதான் கொடுப்பாரு. பஸ்ட் மார்க்தான் வாங்க முடிலே, லாஸ்ட் மார்க்காவது வாங்காம இருக்கலாம் இல்லியா! என் அப்பா உதைக்கு இந்த ஓமப்பொடி உடம்பு தாங்காது. வர்ரேப்பா.

(குமார் போகிறான். மோகன் சிரிக்கிறான்)

**அம்மா :** (உள்ளிருந்து அழைத்தல்) மோகன் இங்கே வந்துட்டுப் போயேன்.

**மோகன் :** அம்மா! அங்கே வந்தா என்னோட எழுதுற வேலைகெட்டுப் போயிடும். சூடா ஏதாவது இருந்தா இங்கே கொண்டு வாம்மா.

**அம்மா :** (வந்துகொண்டே) சூடா நெருப்புத்தான் இருக்கு. கொண்டு வரட்டுமா?

**மோகன் :** அம்மா கொடுத்தா, அதையும் அமிர்தம்னு சாப்பிட்டுடுவேன்.

**அம்மா :** இப்ப காபி தர்றேன்....அப்புறமா நெருப்ப தர்ரேன். (இருவரும் சிரிக்கின்றனர்). மோகன் இது புது பேனு மாதிரியா இருக்கே? அப்பா வாங்கித் தந்தரா?

**மோகன் :** இல்லேம்மா.

**அம்மா :** எப்படி கிடைச்சது உனக்கு?

**மோகன் :** பள்ளிக்கூடத்து மைதானத்திலே கிடந்தும்மா. எடுத்துகிட்டு வந்துட்டேன்.

**அம்மா :** அது ரொம்ப ரொம்பத் தப்பு மோகன். கீழே கிடக்குற பொருளெல்லாம் உனக்குச் சொந்தம் இல்லே. தெரியுமா?

**மோகன் :** அப்படி ஏன் காணுமல் போடணும்? தவறுக்கு இதுதான் சரியான தண்டனை. கீழே கிடந்து, நான் தானே எடுத்தேன். இது எனக்கேற்ற பரிசு தானே...இல்லியாம்மா?

**அம்மா :** இல்லெ மோகன். தவறு செய்யுறது மனுஷ ரோட இயற்கைன்னு சொல்வாங்க. அதுபோல, ஒரு பொருளை தவற விடுறதும் இயற்கைதான். எல்லோரும் எப்பொழுதுமே ஜாக்ரதையா இருக்க முடியுமா? நீ செய்தது ரொம்பத் தவறு.

**மோகன் :** நீங்கதாம்மா தவறுன்னு சொல்றீங்க. எல் லோருந்தான் இப்படி எடுத்து, தானே வச்சிகிட்டு சந்தோஷப்படுறாங்க.

**அம்மா :** உண்மைதான். ஆனு, அதையே நீயும் செய்ய ணுங்கறது நியாயமேயில்லே. பேனுவை தொலேச்ச பையனேட மனசு, என்ன பாடுபட்டிருக்கும்? அவனேட பெற்றோர்கள், அவனை எப்படி திட்டி யிருப்பாங்க! அந்தப் பேனு இல்லாம, எழுதறதுக்கு அந்தப் பையன் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பான். முதல்ல, இந்தப் பேனுவை கொண்டுபோய் உங்க தலைமையாசிரியர் கிட்ட கொடுத்துட்டு வா.

**மோகன் :** வேண்டாம்மா. நானே வச்சுக்குறேன்.

**அம்மா :** எத்தனையோமுறை உனக்கு சொல்லி யிருக் கேன். திரும்பத் திருப்ப இந்தப் பழக்கம்தான் வருது.

**மோகன் :** இதுதான் கடைசி தடவைம்மா. இன்னமே செய்யவே மாட்டேன்.

**அம்மா :** மோகன்! நீ நல்லா நேர்மையோட வாழணுங் கறதுதாம்பா எங்க ஆசை. பிறத்தியார் பொருளுக்கு ஆசைப்படாத மனசுலேதாம்பா, அமைதியும் ஆனந்தமும் நிறைய இருக்கும்.

**மோகன் :** சரிம்மா. எந்தப் பொருள் இனிமே கிடைச் சாலும் உடனே கொண்டுபோய் தலைமை ஆசிரியர் கிட்டே கொடுப்பேன். சரிதாணும்மா.

**அம்மா :** இப்பதான் நீ சமர்த்துப் பையன்.

**மோகன் :** எங்க அம்மா நல்ல அம்மா.

(இருவரும் சிரிக்கின்றனர்.)

(காட்சி மாற்றம்.)

## காட்சி 2

**உள்ளே :** மோகன், குமார்.

**மோகன் :** குமார் ஒரே வாரந்தான். ஒரே மூச்சுல உட் கார்ந்து எல்லாத்தையுமே எழுதி முடிச்சுட்டேன் பார்த்தியா!

**குமார் :** மோகன்! பெரிய காரியம் செய்திட்டியே எப்படி உன்னாலே எல்லாத்தையும் எழு முடிஞ்சது?

**மோகன் :** எல்லாத்துக்கும் இந்தப் பேனுதா காரணம். சும்மா வாழைத்தண்டு மேல கைபோ மாதிரி, பேப்பால எப்படி வழவழன்னு எழுது தெரியுமா? இந்தப் பேணு மட்டும் இல்லேன்( என்னுல இந்த காரியத்தை செய்யவே முடி சிருக்காது.

**குமார் :** மோகன்! ஏது இந்தப் பேனா? புதுசா இருக்கே! ஆமா! (யோசனையுடன்) இந்தப் பேனாவை எங்கே யோ பார்த்த மாதிரி இருக்கே.

**மோகன் :** (தடுமாறி) ம்! கடையில பார்த்திருப்பே. போடா மண்டு! பேனான்னா இது ஒரு பேனாதானா? எத்தனையோ இருக்கும்?

**குமார் :** இல்லே மோகன். இதை நான் கூட வாங்கி, எழுதி பார்த்திருக்கேன். இது எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு.

**மோகன் :** இருக்கும் இருக்கும்! (கோபமாக). ஏண்டா! இனிமேல இந்த பேனா, என் பேனா மாதிரி இருக்குன்னு சொல்லி, சொந்தம் கொண்டாடுவே போலிருக்குதே! குமார்! இப்படி கொஞ்சம் கொஞ்சமா ஒட்டுறியே. என்னப்பா சமாசாரம்?

**குமார் :** ஒன்னுமில்லே. நல்லா யோசனை பண்ணி நாளைக்கே சொல்றேன் பாரு! நிச்சயமா சொல்வேன்.

**மோகன் :** (ஏளனமாக) பெரிய துப்பறியும் சிங்கம்! போடா! நான் எழுதி முடிச்ச கேள்வி பதில் நோட்டைப் பாருடான்னா, புத்தி போகுது பாரு! சாப்பாடு எப்படின்னு கேட்டா, சட்டி, பானையைப் பார்த்து ஆராய்ச்சி செய்யுற உன் மூளைய கொண்டு போய், குப்பையில போடு.

**குமார்:** கோவிச்சுக்காதே மோகன்! இப்ப நான் என்ன சொல்லிட்டேன். நீ இந்த பேனாவைப்பத்தி பெருமையா பேசுனெ! நானும் அதைப்பத்தியே பேச்சை ஆரம்பிச்சேன். அது சரி! இந்தப் பேனா உன் பேனாதானே?

**மோகன் :** என்னடா அவ்வளவு பெரிய சந்தேகம்? என் கிட்ட தானே இந்தப்பேனு இருக்கு.

**குமார் :** உன் கிட்ட இருக்குறதுனுல உன்னேட பொருள்னு எப்படி என்னுல ஒத்துக்க முடியும்? சரி பேச்சை விடு மோகன்! இது உன் பேனுதான்.

**மோகன் :** அதுதானே பார்த்தேன். உண்மை எப்பவும் உண்மைதாண்டா.

**குமார் :** நீ சொல்றது சரிதான் மோகன். இந்த நோட் புத்தகத்தை கொஞ்ச நேரங் கொடேன். ஒரே மூச்சுல காப்பி பண்ணிகிட்டு, கொண்டு வந்து தந்துடுறேன்.

**மோகன் :** பாடுபடுறவன் ஒருத்தன். பலனை அனுபவிக் குறவன் இன்னொருத்தன். இந்த ஒசுக்காகத்தான் ஊர்பட்ட பேச்சு பேசுனியா?

**குமார் :** நீ நல்ல புத்திசாலி. என்னைபோல முட்டாளுங் களுக்கு, நீதானே கொடுத்து உதவணும்.

**மோகன் :** துப்பறியுற சிங்கம் அதுக்குள்ளே துவண்டு போயிட்டியே! இந்த நோட் புத்தகத்தைப் பார்க்கு லேன்னு, நீ என்ன செய்வெ?

**குமார் :** வழக்கமா கடைசி பெஞ்சல உட்கார்ந்து, வாங்குற கடைசி மார்க்கை இப்பவும் வழக்கமா வாங்குவேன்.

**மோகன் :** அப்படின்னு, இப்பவும் வாங்கு.

**குமார் :** வாங்கிடுவன். அது உனக்கில்லெ அவமானம்.

**மோகன் :** அவமானம் எனக்கா! எப்படி?

**குமார் :** முதல் மார்க் வாங்குற மோகனேட பிரண்டு, குமார், முட்டை வாங்குனு அவமானம் உனக்கு

தான்பா. அதனாலதான், ஏதோ பாஸ் மார்க் வாங்க உதவி பண்ணுன்னு கேட்குறேன்.

**மோகன் :** நான் கஷ்டப்பட்டு எழுதியிருக்கேன்!

**குமார் :** உண்மைதான். நீதான் எழுதியிருக்கே. நீதான் நிறைய மார்க் வாங்கனும். முதல் மாணவனா வரணும். அப்பா கிட்ட காட்டணும். அவர் தரப் போற புது சைக்கிளை ஓட்டணும்.

**மோகன் :** அப்பொ நீ என்ன செய்வே?

**குமார் :** நீ ஓட்டுற புது சைக்கிளைப் புடிச்கிட்டு பின்னா லேயே ஓடி வருவேன்.

**மோகன் :** (பெருமையுடன்) ஏன்? பின்னால ஏறிக்க மாட்டியா?

**குமார் :** மாட்டேன். புது சைக்கிள்ல மண்ணு பட்டுடும். நான் மாட்டேப்பா.

**மோகன் :** போடா பைத்தியம். இப்பதான் கேள்வி பதில் ரெடி. அதுக்குள்ளே சைக்கிளைப்பத்தி கனவு காணுறான்.

**குமார் :** சைக்கிள் நிச்சயம்பா மோகன். அந்த நோட்டை தாடா! உடனே தந்துடுறேன்.

**மோகன் :** மாட்டேன்! நான் படிக்கணும்.

**குமார் :** அப்பொ நீ படி! நான் கேட்குறேன்.

**மோகன் :** நான் என்ன பூங்காவில உள்ள ரேடியா பெட்டியா? போடா! விட்டுக்குப் போய் படி.

**குமார் :** சரிப்பா இது உன் வீடு. நான் போறேன். டேய் மோகன்! ஊர் சுற்றும ஒழுங்கா வீட்டில் இருந்தே படி!

மோகன் : ஏண்டா? நீ எனக்குப் புத்தி சொல்றியா?

குமார் : புத்தி சொல்றதுக்கு சுலபமா இருக்கு. பின் பற்றத்தான் முடியலே! முட்டாளுங்களுக்கு எல்லாம், இப்ப இது ஒன்னுதான் சுலபமா வருது.

மோகன் : என்னது?

குமார் : மற்றவங்களுக்கு புத்தி சொல்றதுதான்.

(இருவரும் சிரிக்கிறார்கள். குமார் போகிறான்.)

## காட்சி 3

இடம் : வீடு காலம் : மாலை

உள்ளே : மோகன், அம்மா, தலைமை ஆசிரியர், குமார்.

மோகன் : (பதட்டத்திலே கத்தி அழைத்தல்) அம்மா அம்மா! அம்மா!...

அம்மா : என்ன மோகன்? ஏன் அப்படி பதர்றே? என்னப்பா இது? வீடெல்லாம் புத்தகமா எறைஞ்சு கிடக்குது?

மோகன் : போச்சும்மா! எல்லாம் போச்சு!

அம்மா : புரியும்படியா சொல்லுப்பா!

மோகன் : நாளைக்கு காலையில் எனக்கு அரையாண்டுத் தேர்வு ஆரம்பிக்குது. தெரியுமில்லே!

அம்மா : அதுதான் எனக்குத் தெரியுமே!

மோகன் : எல்லா பாடத்துக் கேள்விக்கெல்லாம், விடை எழுதி வெச்சிருந்தேனே! அந்த நோட்புத்தகம்...

**அம்மா :** அதுதான் எனக்குத் தெரியுமே.

**மோகன் :** அந்த நோட் புத்தகத்தை படிச்சாதாம்மா முதல் மார்க் வாங்க முடியும்.

**அம்மா :** அதுவும் எனக்கு நல்லா தெரியுமே!

**மோகன் :** அந்த நோட் புத்தகத்தை! நீங்க பார்த்தீங்களா?

**அம்மா :** எனக்குத் தெரியாதே.

**மோகன் :** என்னம்மா எல்லாம் தெரியும்னு சொன்னீங்க. இப்ப தெரியாதுன்னு சொல்றீங்களே.

**அம்மா :** அவசரப்படாம தேடு. எங்கே போயிடப் போகுது. இங்கேதான் எங்கேயாவது இருக்கும்.

**மோகன் :** எல்லா பக்கமும் பார்த்தாச்சே! எனக்கு என்ன பண்றதுன்னு, ஒன்னுமே புரியலியே.

**அம்மா :** நிதானமா உட்கார்ந்து, நினைச்சு பாரு. இன்னைக்கு பூரா எங்கெங்கே போனே, எங்கெங்கே உட்கார்ந்தெ? யார்கூட பேசிப் பழகுனெ?

**மோகன் :** வகுப்பிலே உட்கார்ந்திருக்கும்பொழுது, என் கையிலே நோட் இருந்தது. சாப்பிடும்போதும் என் கிட்டவே இருந்தது. குமார் வந்து விளையாடக் கூப்பிட்டான். அப்பொழுதும் என் கையிலேயே இருந்தது. அப்புறம்...அப்புறம்...

**அம்மா :** அவசரப்படாம யோசனை பண்ணு. அப்புறம் என்ன செய்தேன்னு...

**மோகன் :** ம்...ஞாபகம் வருது. ஒரே தாகமா இருந்தது. தண்ணீர் பானையிலே தண்ணி இல்லே. அதனால குழாயடிக்குப் போனேன்.

அம்மா : எப்படி தண்ணி குடிச்சே? ஞாபகம் இருக்கா.

மோகன் : கைரெண்டும் ஒரே அழுக்கா இருந்ததும்மா. குழாய்க்கு மேலே இருந்த ஒரு இடத்துல. நோட் புத்தகத்தை வச்சிட்டு,

அம்மா : திரும்பவும் எடுத்தது நினைவிருக்கா.

மோகன் : அதுதாம்மா ஞாபகம் இல்லே...குமாரை அனுப்பியிருக்கேன்.

குமார் : (ஓடிவந்து) மோகன்...எல்லா இடத்தையும் நல்லா தேடிப் பார்த்துட்டேன். எங்கேயும் கிடைக்கலியே?

அம்மா : பையன்கள் யாரையாவது கேட்டியா குமார்?

குமார் : யாருமே அங்கே இல்லேயேம்மா! எடுத்தவன் எப்படிம்மா கொண்டு வந்து கொடுப்பான்?

மோகன் : குமார்! நீ என்னடா சொல்றே?

குமார் : பரீட்சைக்குத் தேவையான வினாவிடையுள்ள நோட்புத்தகம் ஆச்சே. எடுத்தவன் எப்படி திருப்பிக் கொடுப்பான்?

மோகன் : தேவைன்னு, எடுத்துக்குறதா!...அடுத்தவன் பொருளுக்கு ஏண்டா அவ்வளவு ஆசை?

குமார் : கீழே கிடந்தது...அவன் கண்டெடுத்தான்! தேவை இருந்தது. வச்சிக்கிட்டான். அவ்வளவு தான்.

மோகன் : கேட்டியாம்மா! இது என்னம்மா நியாயம்? இப்ப என்னோட பரிட்சை போச்சு. நான் பெயில் தாம்மா. என் முதல் மார்க் போச்சு. மானம் போச்சு! பரிசும் போச்சேம்மா.

**அம்மா :** என்னப்பா செய்யறது? நான் அன்னைக்கே சொல்லலே! தவற விடுகிறது தப்பு இல்லேப்பா! தன்னுடையது இல்லேன்னு, அதை உரிய இடத்துல கொண்டுபோய் சேர்க்குறதுதாம்பா துணிவுள்ள மனுஷனுக்கு அடையாளம். பள்ளிக் கூடத்துல கண்டெடுத்தா தலைமை ஆசிரியர் கிட்ட தரணும். பொது இடத்துல கிடைச்சா, போலீஸ் ஸ்டேஷன்ல தரணும்.

**மோகன் :** நான் செய்த தப்புக்கு இவ்வளவு பெரிய தண்டனையாம்மா?

**அம்மா :** தண்டனைன்னு சொல்லலே...நீ கண்டெடுத்த பேனாவை கொண்டுபோய், தலைமை ஆசிரியரிடம் கொடுத்திருந்தா, ஒருவேளை உன்னோட நோட்டுப் புத்தகத்தையும் யாராவது கொண்டுபோய் கொடுத்திருக்கலாம்! உன்னை மாதிரியே எல்லாம் கொண்டு போயிட்டா, எப்படியப்பா திரும்பி வரும்னு எதிர்பார்க்க முடியும்.

(கதவு தட்டும் ஒலி கேட்கிறது.)

**அம்மா :** மோகன்! போய்யாருன்னு பாருப்பா.

**மோகன் :** (கதவைத் திறந்து) வணக்கம் ஐயா! அம்மா! அம்மா! இங்கே வாங்க! எங்க தலைமை ஆசிரியரும்மா.

**அம்மா :** வணக்கங்க. இப்படி உட்காருங்க...

(நாற்காலியில் உட்காருகிறார்.)

**தலைமை ஆசிரியர் :** பரவாயில்லேம்மா! இந்த நோட் புத்தகம், விளையாட்டு மைதானத்தில இருந்த

குழாய் பக்கத்துல இருந்ததுன்னு, ராமுன்னு ஒரு பையன் கொண்டுவந்து கொடுத்தான். பெயரைப் பார்த்தா மோகன்னு இருந்தது. அவசியத் தேவைங்கறதனுல மட்டுமில்லே, என் வீடும் இந்தப் பக்கம்ங்றதுனுல, அப்படியே கொண்டு வந்து தந்துட்டுப் போகலாம்னு வந்தேன்.

அம்மா : ரொம்ப நன்றிங்க...மோகன் பதறியே போய்ட்டான்.

த.ஆ : நல்ல வேளை! ராமு நல்ல பையன். அவன் கொண்டு வந்து கொடுத்ததனுலே, எல்லாம் நல்ல படியா முடிஞ்சது. இதை கேளுங்க. அவன் பேனவும் அதே இடத்துலதான் தொலைஞ்சு போச்சாம். ஆனு யார் எடுத்தாங்களோ? கொண்டு வந்து தரவே இல்லேம்மா!

மோகன் : என்னை மன்னிச்சுடுங்க ஐயா. அந்தப் பேனு இதுதாங்க...அற்பத்தனமா ஆசைப்பட்டு, அறிவிழந்துட்டேன். ராமுகிட்டே இப்பொழுதே போய் மன்னிப்பு கேட்கப்போறேன்.

த.ஆ : பரவாயில்லே மோகன்! தவறு செய்யறது இயற்கைதான். தெரிந்த பிறகு திருந்தி வாழறது தான், தூய்மையான வாழ்க்கையைத் தரும். இனி மேலாவது நல்ல பையனு இருக்கணும். மோகன்! நான் வரட்டுமா.

அம்மா : ரொம்ப நன்றிங்க. கொஞ்சம் இருங்க! காபி சாப்பிட்டுட்டு...

த.ஆ : வேண்டாம்மா! நேரமே ஆச்சு. இன்றைய குழந்தைகள் தான் நாளைய தலைவர்கள். மோகன்! குமார்! நீங்கள் எல்லோரும் நல்ல பாதையில் போனா, நாடே நல்லா வாழுமே இல்லியாப்பா. நான் வர்றேன்! மோகன்! குமார்!... வர்ரேம்மா, வணக்கம்!

மூவரும் : ரொம்ப நன்றிங்க ஐயா.

— திரை —



# சுதந்திரம்



## கதை மாந்தர்கள்

மாலா

பாலா

அம்மா

அப்பா

பால்காரி

மோகினி

## காட்சி 1

இடம் : வீடு. நேரம் : விடியற் காலை.

உள்ளே : மாலா, பாலா, அம்மா, பால்காரி.

(வெளியிலிருந்து ஒரு குரல்)

பால்காரி : பால்... அம்மா பால்... பாலும்மா... அம்மா பாலு.

அம்மா : (வந்து கொண்டே) இதோ வந்துட்டேன்... (எதிரே பால்காரி நிற்கிருள்) என்னடி இது! நான் தான் 'இதோ வந்துட்டேன்னு, வர்ரனே... வாசல்லே நிற்காமே, வீட்டுக்குள்ளேயே வந்துட்டியே!

பால்காரி : வெளியில நின்னு கத்துறு, பிச்சைக்காரி மாதிரி இருந்தது. வெட்கப் பட்டுகிட்டு உள்ளே வந்துட்டேன்.

அம்மா : முக்காடு போட்டு கிட்டு கத்துறதுதானே! செய்யுற தொழில்ல வெட்கம் என்னடி?

பால்காரி : வெட்கம் வந்துடுச்சே! என்ன பண்ணச் சொல்றீங்க...

அம்மா : வந்ததே வந்தெ ...இப்படி உட்கார்ந்தே கத்து

பால்காரி : (சத்தமாக) (உட்கார்ந்தபடி) அம்மாபால்... (கத்துகிருள்)

அம்மா : காலங்காத்தால ஏண்டி இப்படி கழுதை மாதிரி கத்துறே...அட சீ! எழுந்திரு.

பால்காரி : குட்டிச் சுவர்லேதான் கழுதை கத்தும். நான் இங்கே கத்திட்டேன். இந்தாங்க, பால், செம்போட இருக்குது. அளக்கட்டுமா!

அம்மா : ரொம்ப அளக்க வேணும்... போய்ட்டு வா...

பால்காரி : நான் வர்ரேம்மா! இந்த நாட்டுல கத்தறதுக்கு கூட சுதந்திரம் இல்லெ...

அம்மா : ஏய்! இது நாடு இல்லேடி... என் சொந்த வீடு.. போ... இது பார்க், பஸ் ஸ்டாண்டுன்னு நினைச்சியா (பால்காரி நிற்கிருள்). எட்டரை மணிக்கு ஸ்கூல். எல்லாம் முடிஞ்சாகணும்... ஏண்டி நிற்குற... இங்க பாரு.. இனிமே வெளியிலே நின்னே கதவை தட்டு .. நானே வந்து வாங்கிக் குறேன்.

பால்காரி : இந்தா பாரும்மா... கதவைத் தட்டுறேன்... அப்புறம் கதவு உடைஞ்சா, என்னை கேட்கக் கூடாது.

அம்மா : குடிக்குறது எருமைப்பாலு... உடம்பும் புத்தியும் அப்படித்தான் இருக்கு...போ போ.

(மாலா கொட்டாவி விட்டவாறு வருகிருள்.)

மாலா : அம்மா! நாமுந்தான் எருமைப்பாலை தினமும் குடிக்கிறோம்.

அம்மா : அவளுக்கும் உனக்கும் வித்தியாசம் இருக்குதுன்னு நான் சொல்லலியே!

மாலா: அம்மா! (கத்துகிருள்)

அம்மா : பின்ன என்னடி! மணி ஏழரையாச்சு...எட்டரை மணிக்கு ஸ்கூல் இல்லே... பொம்பளை பிள்ளை மாதிரியா இருக்குறீங்க...

மாலா : இந்த வீட்டுல படுத்து தூங்ககூட சுதந்திரம் இல்லே... பக்கத்து வீட்டுக்கு கேட்கிற மாதிரி கத்துறீங்களே! படிச்சு பார்த்தா தாம்மா களைப்பு தெரியும். கஷ்டமும் புரியும்!

அம்மா : ஏண்டி! என்னை படிக்காதவள்னு குத்திக் காட்டுறியா.!

மாலா : குத்துல... உண்மையைத்தான் சொன்னேன்... அம்மா... எனக்கு காபி வேணும்...

அம்மா : இந்தா பால்... போய் டிக்காஷன் போடு...நான் வந்துடுறேன்.

மாலா : அதோ தூங்குறுளே பாலா...அவளை போடச் சொல்லு. நான் ஒரு நிமிஷத்துல பேப்பர் படிச்சுட்டு வந்துடுறேன். உலக விஷயமெல்லாம் எப்படி யிருக்கோ? (அவசரமாக பேப்பரை தேடுகிருள்.)

அம்மா : முதல்ல வீட்டு விஷயத்தை தெரிஞ்சுக்கோ... வெளிவிஷயம் தானுவே புரியும்.

மாலா : (முணு முணுத்தல்) பேப்பர் படிக்கக்கூட இங்கே சுதந்திரம் இல்லே... ம்...
(சத்தமாக படிக்கிருள்) சமைக்கும்போது சேலையில் தீ... கல்லூரி மாணவி வெந்து சாவு... அம்மம்மா.. கேட்டியா... என்னை போயி காபி போடச் சொல்றீயே... உனக்கே நல்லாயிருக்கா...

அம்மா : வீட்டுல காபி போடாட்டி, வானத்துலே யிருந்து காபி கொட்டுமா? பயபக்தியோட தான் வேலைசெய்யணும்... காபி உனக்கு எப்படி வரும்?

**மாலா :** ஏ பாலா! எழுந்து வாயேண்டி... குறட்டை சத்தம் காதை பொளக்குது...காபி எப்படிக் கிடைக்கும் காபி. (கத்துகிருள்)

**பாலா :** (வந்துகொண்டே) காசு கொடுத்தா காபி ஓட்டல்ல கிடைக்கும். இது தெரியாதா...

**அம்மா :** மூஞ்சைக் கழுவிட்டு வாடி மூதேவி .. வர்ர ஸ்டெயிலைப் பாரு..எங்கே போறே ..

**பாலா :** என்னம்மா இது! எங்கே போறே...அங்க பார்க்காதே... இங்கே நிற்காதே. இப்படி அடக்கிக்கிட்டே இருக்குறியே...

**அம்மா :** போய் காபி போடு.

**பாலா :** அப்பாவைக் கூப்பிடுறேன்.

**அம்மா :** காபி போடவா...

**மாலா :** ரிப்போர்ட் பண்ண!

**அம்மா :** என்னை என்ன, வேலை செய்யுற மெஷின்னு நினைச்சிங்களா! உங்களுக்கு காபியும் இல்லே. டிபனும் இல்லே...பட்டினியா போங்க...(போகிருள்)

**பாலா மாலா :** (இருவரும் வயிற்றைப் பார்த்தபடி) பட்டினியா!

— திரை —

## காட்சி 2

**இடம் : வீடு** **நேரம் : காலை**

**உள்ளே :** *மாலா, பாலா, அம்மா, அப்பா*

(பாலா, மாலா பள்ளிக்குப் புறப்படும் நேரத்தில்

**அம்மா :** (சலிப்புடன்) அப்பா...காலையில எழுந்திருச்சா பம்பரமா சுத்த வேண்டியிருக்கு.

மாலா : (வந்து கொண்டே) ராட்டினமா சுத்துனாலும், நாங்க ஏறி உட்கார்ந்துக்க வசதியா இருக்கும்.

பாலா : அம்மா வர வர useless ஆ போறாங்க. இல்லியா!

அம்மா : வாயை மூடுங்கடி. படிக்கப் போறது பண்பாடு கத்துக்குறதுக்கு. இப்படி பட்டி நாய் மாதிரி வாயடிக்க இல்லே!

மாலா : எது பேசுனாலும் எங்களை அடக்கிடுறியே! பேசவே பயமாஇருக்கு! பேச்சு சுதந்திரமே இல்லியே!

பாலா : இனி மூச்சு விடக்கூட, அம்மாவை கேட்டுத் தான் விடணும்.

அம்மா : பேச்சைக் குறையுங்க! மூச்சை நல்லாவே விடலாம்.

மாலா : அப்பொ மூச்சை குறைச்சா?

பாலா : பேச்சு அடங்கிடும்! மேலோகத்துக்கு டிக்கட் வாங்கிட வேண்டியதுதான்.

மாலா : முடியாது! நமக்குவிடுதலே வேணும். விடுதலே விடுதலே— விடுதலே! (பாடுகிருள்) ஆகா! பாரதியார்- சும்மா்வா பாடியிருக்கிருர்.

அம்மா : (எரிச்சலுடன்) உங்களையெல்லாம் புள்ளைங் கன்னுநினைச்சேன்.தப்பு! தப்பு! புள்ளை பூச்சிங்க.

பாலா : (அம்மாவை கிச்சு கிச்சு மூட்டுகிருள்)

அம்மா : என்னடி இது?

பாலா : புள்ளைபூச்சியை மடியிலகட்டிகிட்டு ராமாயணம் கேட்குற மாதிரின்னு எங்க ஸ்கூல் ஆயா அடிக்கடி சொல்வா! அதுதான் பண்ணிப்பார்த்தேன்.

அம்மா : போய் ஆயாவையே கிச்சு கிச்சு பண்ணு, நேர மாச்சு, ஸ்கூலுக்கு போங்க.

மாலா : (கொஞ்சலாக) அம்மா! எனக்கு பர்த்டே வருது. என்ன வாங்கித் தரப்போறே!

அம்மா : புண்ணாக்கு வாங்கி வேக வச்சுத் தர்ரேன். வந்து தின்னு.

பாலா : அம்மா! நாங்க உனக்கு ரெட்டைக் குழந்தைங் கல்லே.

அம்மா : இல்லே! ரெண்டும் ரெட்டை வாலுங்க! மொட்டை வாலுங்க!

மாலா : (குழைவாக) சரி இருக்கட்டும்மா! அம்மா! புது டிரஸ் வாங்கித்தாம்மா.

அம்மா : என் கிட்ட பணம் இல்லே! அப்பாவுக்கு increment வரட்டும். வாங்கித் தர்ரேன்

பாலா : அப்பா வீட்டுலே தூங்கறதைப் பார்த்தா, ஆபிசிலும் அப்படித்தான் தூங்குவார்போல இருக்குது. கட்டாய ஓய்வு கொடுத்துடுவாங்க ளோன்னு பயமா இருக்குதும்மா...

மாலா : அம்மா! வீட்டு செலவுக்குள்ள பணத்தை, நீ (Adjust) அட்ஜஸ்ட் பண்ணி வைப்பியே! அந்தப் பணத்துல வாங்கித்தாம்மா...

அம்மா : என்னடி சொன்னே? அட்ஜஸ்மென்டா! அடியே. இந்தக் கை சுத்தமான கை...கறை படாத கை...

பாலா : ஆமா மாலா! அம்மா இப்பத்தான் கை அலம்பி புடவையில துடைச்சிகிட்டே வர்ராங்க...அம்மா... எனக்கு, ஜீன்ஸ் போட்டுக்க ஆசையா இருக்கு தும்மா...

அம்மா : ஏண்டி? ஜீன்ஸ் போட்டுகிட்டு ரோட்டுல டான்ஸ் ஆடப்போறியா...மூஞ்சைப்பாரு...

**மாலா :** சரி. அது வேண்டாம்...மாக்சி வாங்கித் தாம்மா ...

**அம்மா :** மாக்சியா...அதை போட்டுகிட்டு முகத்துல கரும்புள்ளியும் செப்புள்ளியும் குத்திக்க...சர்க்கஸ்ல கரடி, சைக்கிள் விடுற மாதிரி இருக்கும்....

**பாலா :** சரி. அதுவும் வேண்டாம்...பெல்ஸ்மா...

**அம்மா :** பெல்ஸை கட்டிக்கோ......நாங்கதான் வர்ரோம்னு வீதியில மணி அடிச்சுகிட்டு போங்கடி... பெல்சாம் பெல்ஸ். ஏன் தான். உங்களுக்கு இப்படி புத்தி போகுதோ...!

**மாலா :** சரிம்மா...ரொம்ப டீசண்ட் டிரஸ்...கராரா...

**பாலா :** கருரா! அம்மா கத்தப்போரு...கோவிந்தா அரோகரான்னு போகவேண்டியதுதான்...

**மாலா :** கராரா...

**பாலா :** அரோகரா...

(மாற்றிமாற்றிக் கத்துகிருர்கள். அம்மா காதைப் பொத்திக் கொள்கிருள்.)

**மாலா :** பாலா. நம்ம அம்மாவுக்கு பட்டு மாமி புடவையும், பட்டிக்காட்டு ஸ்டெயிலுந்தான் பிடிக்கும். (Modern Dress) மாடர்ன் டிரஸ் எங்கே புரியப் போகுது...

**அம்மா :** பாலா மாலா! இங்கே வாங்க...உங்களுக்கு ஸ்டெச்பேண்ட் தெரியுமா?...

**இருவரும் :** என்னது?...

**அம்மா :** ஸ்டெச் பேண்ட்...அதுவும் தெரியும்ண்டி எனக்கு!

இருவரும் : எப்ப தெரியும்? எப்படித் தெரியும்?

அம்மா : ஒருநாள் (Shopping) ஷாப்பிங் போயிருந்தேன். பின்னாலே ஒருத்தி ஏதோ டைட்டா பேண்ட் போட்டுகிட்டு வந்தா...படபடன்னு சத்தம். திரும்பிப் பார்த்தா, அந்தப் பொண்ணு குடு குடுன்னு தட்டி மறைவுக்குஓடுரு ..அது என்னடிடிரஸ்னு கேட்டா, ஸ்டெச் பேண்ட்டாம்...ஸ்டெச் பேண்ட்ன்னு பேசி, அந்த வீதியே சிரிப்பா சிரிச்சுப் போச்சு...

இருவரும் : (வெட்கத்துடன்) அப்படியாமா!...

அம்மா : போங்க! பள்ளிக் கூடத்துக்கு ஒழுங்கா போயிட்டு வாங்க...

மாலா : ஏம்மா! (Modern) மாடர்ன் டிரஸ் பண்ணவே கூடாதா?

அம்மா : இங்கே பாரும்மா! டிரஸ் பண்ணிக்குறது, மானத்தை காக்கத்தான். பிறரோட கண்ணை பறிக்கஇல்லே. நாமபோடுற டிரஸ்ஸைப் பாத்துட்டு தான், மற்றவங்க நம்மளை எடை போடுவாங்க. கன்னுபின்னுன்னு டிரஸ் போட்டா, பேச்சும் கன்னு பின்னுன்னுதான் வரும். ரோட்டுல வர்ர கலாட்டா வுல பாதி டிரஸ்ஸால வர்ரதுதான், போம்மா...

(இருவரும் விறைப்பாக நிற்கின்றனர்.)

போங்க .. போகமாட்டிங்களா ... தீஞ்ச தோசை மாதிரி மூஞ்சை வச்சுகிட்டு இங்கே நில்லுங்க... நான் வர்ரேன் (வீட்டுக்குள்ளே போகிறாள்)

பாலா : மாலா...ஏன் நிற்குற...ஸ்கூலுக்கு நேரமாச்சு.

மாலா : வா...போய்கிட்டே பேசுவோம். நமக்கு இந்த மாதிரி அடிமை வாழ்க்கை வேண்டாம்...விடுதலை வேணும்...சுதந்திரமா வாழனும்...

பாலா : அதுக்கு என்ன செய்யனும்?

மாலா : இந்தா டிபன் பாக்ஸ்...Water bag, Box...எல்லாத்தையும் தூக்கிக்க...

பாலா : என்னடி எப்பப் பார்த்தாலும் என்னேயே தூக்கச் சொல்றே!

மாலா : தூக்கிக்கிட்டு என் பின்னால வா...அப்பதான் எனக்கு மூட் (Mood) வரும்.

பாலா : நான் என்னடி உனக்கு தூக்கு தூக்கியா... முடியாது.

339373

(உள்ளேயிருந்து அம்மாவின் குரல்)

அம்மா : இன்னும் போகலியா...(கோபமாக)

இருவரும் : இதோ போறோம். (ஓடுகின்றனர்)

—திரை—

894.8112637
NAV

காட்சி 3

இடம் : ரோடு. காலம்: மாலை நேரம்
உள்ளே : பாலா, மாலா, அப்பா.

பாலா : ஏண்டி மாலா! காலையிலயிருந்து யோசிச்சியே! என்னவந்தது!

மாலா : தலைவலி... Head Ache. வீட்டுக்கு போய் அம்மாகிட்ட சூடா காப்பி கேட்கனும்.

பாலா : அம்மாவை அடக்க யோசனை கேட்டா, அம்மா கிட்டவே காபி கேட்கப் போறியா?

மாலா : மாட்டேன்...கேட்க மாட்டேன். பேச்சுக்குப் பேச்சு இடக்கு. எதுக்கெடுத்தாலும் அடக்குமுறை. அடிதடி தர்பார். கொடுமை. இதுக்கெல்லாம் இப்பவே போயி அம்மாவை.

பாலா : காபி கேட்கப் போறியா?

REFERENCE
PUBLIC LIBRARY
- 5 MAR 1985

மாலா : (கோபமாக) இல்லே. நீதி கேட்கனும். நம்ம அம்மாவை குற்றவாளிக் கூண்டில நிறுத்தனும். கொலைகாரியை கேட்கிறமாதிரி கேள்வியா கேட்கனும்.

மாலா : என்ன தண்டனை தரலாம்?

பாலா : சமையற்கட்டுலயே கிடக்கனும். முன்ஹாலுக்கு வந்தா, காலே முறிப்போம். மீறிப் பேசினு கழுத்தை முறிப்போம்னு, கடுமையான தண்டனை.

பாலா : அதையும் மீறினு?

மாலா : கேள்வியை நிறுத்து. பதில் சொல்ல திணற வேண்டியிருக்கு. ஏற்கனவே எனக்கு தலைவலி.

பாலா : முடிவைச் சொல்லு. அம்மா மீறினு, என்ன பண்றது?

மாலா : வீட்டை விட்டு வெளியில வந்துடறது: அப்பா வோடவே வந்துடறது. அம்மாவை அங்கேயே விட்டுட்டு, நாம மட்டும் தனியா ஒரு வீட்டுல இருப்போம்.

பாலா : அப்போ, அப்பா தான் சமைப்பாரா?

மாலா : உதைப்பாரு...ஏண்டி. அப்பா ஆபீஸ் போவாரா? சமைப்பாரா?

பாலா : கேள்வி நான் தான் கேட்டேன். நீ தான் பதில் சொல்லனும். என்னே கேள்வி கேட்டா எனக்கு பதில் சொல்லத் தெரியாது. அதோ! அப்பா வர்ராரு. அவரையே கேட்குறேன்.

மாலா : ஏண்டி! ஒருவேளை அப்பாவை கட்டாய ஓய்வுன்னு வீட்டுக்குத் தள்ளிட்டாங்களோ! ஆபீஸ் நேரத்துக்கு முன்னடியே வந்துட்டாரு!

அப்பா : (சிரித்தபடி) இல்லே மாலா! எங்க மானேஜர் தான் சீட்டுல உட்கார்ந்து தூங்கிகிட்டேஇருப்பார்.

பேரு கணபதி. வயிறும் அப்படித்தான் இருக்கும் அவரை வீட்டுக்கு அனுப்பிச்சாச்சு. நாங்களும் அவ போனதை கொண்டாடி, டீ பார்ட்டி பண்ணிட் வந்தோம். வீட்டுக்கு போனு உங்க அம்மா இருப்பா அதனுல்தான் இப்படியே மெதுவா... ஒதுங் வர்ரேன்.

மாலா : நல்ல அப்பா நீங்க. அம்மாவுக்கு நீங்களும் ஏன் பயப்படனும்! அம்மா யாரு?

அப்பா : உங்களுக்கு அம்மா! ஆமா! அம்மா...எனக்கு. எனக்கு (தயங்குகிருர்)

மாலா : அவங்கயாருமில்ல. Knife.. கத்தி...சும்மா கத் கத்தி.

அப்பா : சும்மா கத்தாதெம்மா...அம்மாவை பத்தி. தப்பா சொன்னு?

மாலா : இப்படி பயந்தா எப்படிப்பா?

அப்பா : பின்னே, எப்படி பயப்படச் சொல்றே!

மாலா : உங்க பயத்துக்கு விடுதலை வேணும்.

பாலா : சுதந்தரமா வாழணும்.

மாலா : அடிமை விலங்கை அறுக்கணும்.

அப்பா : அறுக்கணும். (கையில் சைகை காட்டுகிரு

மாலா : அம்மா அட்டகாசத்தை ஒடுக்கணும்.

அப்பா : ஆமா! ஒடுக்கணும்.

பாலா : அடங்கியே இருக்கணும்.

அப்பா : இருக்கணும்.

மாலா : எப்படிப்பா?

அப்பா : எப்படின்னு என்னை கேட்டா...நான் போ உங்க அம்மாவை கேட்டுன்னு சொல்றேன்.

பாலா : ஏப்பா...நம்ம இஷ்டம் போல நடக்கவே முடியாதா?

அப்பா: இந்தா எட்டடி அகலத்துக்கு ரோடு இருக்கு. இஷ்டம் போல, கால் வலிக்குகுற வரைக்கும் நட.... நானும் காத்து கிட்டு இருக்கிறேன்.

மாலா : அது இல்லேப்பா...மீசையை முறுக்கி மேலே ஏற்று?

அப்பா : என்ன சொல்றே!

மாலா : பாரதிதாசன் வீரம் வர்ரதுக்கு ஒரு பாட்டுபாடி இருக்காரு.

கோழையே நிமிர்ந்து நில்
கொள்கையே எழுந்து செல்.

அப்பா : ஆகா! வீரம் வந்துடுச்சு. இப்ப நான் என்ன செய்யனும்? சொல்லுங்க.

பாலா : வீட்டுக்குப் போகனும். அம்மாவை புடிச்சி...

அப்பா : ஆ!அம்மாமவை புடிச்சி...ஒரே அடி...ஒரே குத்து. ஒரே வெட்டு...

மாலா:வெட்டா...கத்தியை எடுத்தாப்பா...(பயத்துடன்)

அப்பா: கத்தியால இல்லெ...கையால. கராத்தே வெட்டு. வெட்டு ஒன்னு...துண்டு ரெண்டு. வாங்க போகலாம். (போகின்றனர்

—திரை—

## காட்சி 4

இடம் : வீடு. மாலை நேரம்.

உள்ளே : அப்பா, மாலா,பாலா, வேலைக்காரிமோகினி அம்மா.

(வேலைக்காரி நடுஹாலில் கன்னத்தில் கையை வைத்தபடி, சோகமாக உட்கார்ந்திருக்கிறாள். மூவரும் வருகின்றனர்.)

**அப்பா :** ஏய்! உங்க எசமானி எங்கே போயிட்டா? (கோபமாக)

**பாலா :** அம்மா எங்கேடி..?

**மாலா :** எங்கேடி அம்மா?

**மோகினி :** (மௌனமாக இருக்கிருள்)

**அப்பா :** எப்பப் பார்த்தாலும், வீட்டுல இருக்கிறதே-இல்லே. படிக்குறது இராமாயணம். இடிக்குறது ராமர் கோயிலே. இப்படியே விட்டா, வீடு பாழா யிடும். எங்கே அவ - கை பரபரண்ணு அரிக்குது.

**மோகினி :** சுவத்துல அடியுங்க...சரியா போயிடும்.

**அப்பா :** கிண்டலா பண்றே! நரன் கோவத்துல இருக்கேன்.இப்போ, கொலேயே விழுந்துடும்.

**மோகினி :** (பயந்தபடி) கொலே கொலே...

**இருவரும் :** கத்தாததடி...கும்பல் கூடிட போகுது.

**அப்பா :** எங்கேன்னு சொல்லு. ஏழு கடலுக்கு அப்பால இருந்தாலும், ஒரே தாண்டா தாண்டி...

**மோகினி :** அனுமார் கடலே தாண்டுன மாதிரி.

**அப்பா :** வேலேக்காரி மாதிரியா பேசுற,! நாக்கை வெட்டி-காக்காவுக்கு போட்டுடுவேன். அம்மா எங்கேடி?

**மோகினி :** (அழ ஆரம்பிக்கிருள்)

**பாலா :** ஏண்டி அழறே. பயந்துட்டியா... (பயத்துடன்)

**மோகினி :** கால்ல எறும்பு கடிச்சிடுச்சு. வலிக்குது... (அழுகிருள்)

**பாலா :** அம்மா எங்கேடி. சீக்கிரம் சொல்லு.

**மோகினி :** அப்பாவுக்கு தட்டையும் முறுக்கும் பிடிக்கும்னு செஞ்சு வைச்சிட்டு...

**அப்பா:** தட்டையும் முறுக்குமா...எனக்கா... செஞ்சி வச்சிருக்காளா...

**மோகினி :** பால் பாயசம்கூட பண்ணி வச்சிட்டு...

அப்பா : பால பாயசமா...ஆகா! ரொம்ப ருசியா இருக்குமே...இப்பவே பசி வந்துடுச்சே...மோகினி! அம்மா எங்கேடி?

**மோகினி :** பாலாவுக்கும் மாலாவுக்கும் பர்த்டேன்னு சொல்லிட்டு, புது டிரஸ்ஸெல்லாம் வாங்கி வச்சுட்டு ..

**இருவரும் :** புது டிரஸ்ஸா...எங்களுக்கா...

**மோகினி :** ஆமா! அப்பாவுக்குத் தீனியும், உங்களுக்கு டிரஸ்சும் வாங்கி வச்சிட்டு (அழுகிருள்)

**பாலா :** ஏண்டி அழறே...

**மோகினி:** எறும்பு கடிச்சது வலிக்குது. (அழுகிருள்)

**பாலா :** அம்மா எங்கேடி? சொல்லிட்டு அழேண்டி!

**மோகினி :** உங்களை எதிர்பார்த்துகிட்டு ஹாலுக்கும் வாசலுக்கும் நடையா நடந்தாங்க...அப்புறம். (அழுகிருள்)

**மூவரும் :** அப்புறம்.

**மோகினி:** அப்புறம் திடீர்னு...

**மூவரும் :** திடீர்னு...

**மோகினி :** போயிட்டாங்க...(அழுகிருள்)

**அப்பா :** போயிட்டாளா. (அழுகிருர்) மைதிலி! மைதிலி......

**பாலா :** அம்மா! (அழுகிருள்)

**அப்பா :** எப்படி போனு.

**மோகினி :** திடீர்னு போயிட்டாங்க அய்யா! உங்கமேல உயிரையே வச்சிருந்தாங்க. குழந்தைங்க மேல் அவ்வளவு அன்பா இருந்தாங்களே! உங்களுக்குத்

தீனி. இவங்களுக்கு புது டிரஸ்...இப்படி திடீர்னு போயிட்டாங்களே.

மாலா : எங்கேடி போயிட்டாங்க...

மோகினி : ஆஸ்பத்திரிக்கு.

மூவரும் : ஆஸ்பத்திரிக்கா! எதுக்கு.

மோகினி : அய்யா சமையற்கட்டுலே, தட்டையும் முறுக்கும் இருக்கு. சாப்பிடுங்க. பாலா மாலா! பீரோவுல புது டிரஸ் இருக்கு. போட்டுக்கங்க.

அப்பா : அடியே! எதுக்கு ஆஸ்பத்திரிக்கு? அதைச் சொல்லு.

மோகினி : வாந்தி, மயக்கம், பேதி, பித்தம்.

பாலா : அவ்வளவுமா. பலகாரம் செய்யும்போதே அத்தனையும் சாப்பிட்டாங்களோ என்னமோ!

அப்பா : கடவுளே! என் மனைவியைக் காப்பாத்து. அவளை தத்துவேன்: வெட்டுவேன்னு சொன்னதுக்கு தண்டனையா...நான் இனிமே இப்படி சொல்ல மாட்டேன். (கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்.)

மாலா : ஆண்டவனே! விடுதலை விடுதலைன்னு கேட்டேன். எங்க அம்மாவை பிரிக்கப் பார்க்குறியே! நாங்க தாயில்லாப் பிள்ளைங்களா போக விட்டுடாதே.

பாலா : வாங்க ஆஸ்பத்திரிக்கு போகலாம். கடவுளே! அம்மாவை காப்பாத்து.

மாலா : நான் கொடுமைக்காரின்னு சொன்னது தப்பு தான்மா! தப்பு! (கன்னத்தில் போட்டுக் கொள்கிறாள்) புது டிரெஸ். பால் பாயசம்... தட்டை முறுக்கு. அம்மா, அம்மா... (அழுதல்)

மோகினி : நீங்க ஏன் அழறீங்க...எங்க அம்மாவுக்கு நல்லா போச்சு...

மூவரும் : நீ என்னடி சொல்றே.

மோகினி : என் அம்மாவுக்கு உடம்பு சரியில்லே. அவங்க ஆஸ்பத்திரிக்குப் போயிருக்காங்கன்னு தான் சொன்னேன். இப்ப நல்லா போயிடுச்சு. தட்டை முறுக்கெல்லாம் பண்ண என் அம்மா தான் உதவி பண்ணிஞ...

பாலா : எங்க அம்மா எங்கேடி? (அவசரத்துடன்)

மோகினி : ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு இப்பதான் குளிக்கப் போயிருக்காங்க.

அப்பா : அதை முன்னமே சொல்லக்கூடாதா. என்னமோ ஏதோன்னு பயந்து போயிட்டோம்.

அம்மா : (உள்ளேயிருந்து வந்து கொண்டே) அதைத் தாங்க பாசம்னு சொல்வாங்க... நான், நான் உங்க மேல கோபமா இருக்கறதும், நீங்க என் மேல கோபமா இருக்கறதும் வேஷம்ங்க. நாம நல்லா வாழறதுக்கு போட்டுக்குற மாயத்திரை.

பால மாலா : அம்மா! (கட்டிப் பிடித்துக் கொள்கின்றனர்)

அம்மா : பாலா! மாலா! இது கொடுமை இல்லேம்மா! அம்மாகிட்ட அடிமையாயிருந்தா, அதுதாம்மா ஆனந்த சுதந்தரம். பெத்தவங்க பிள்ளைங்க கெட்டுப்போக சம்மதிப்பாங்களா...

வேலிக்குள்ளே இருக்குற பூ தாம்மா, பத்திரமா இருக்கும். புரியுதா! சுதந்திரம்ங்கறது தன்னோட கடமைய செய்யுறதுலே இருக்கணும். புரியுதா...

அப்பா : புரியுதும்மா! ஆனு தட்டையும் முறுக்கும் எங்கே யிருக்குதுணு தான் புரியலே...

அம்மா : எல்லாரும் வாங்க. போய் நொறுக்குவோம்.

—திரை—

# வேடிக்கை



# கதை மாந்தர்கள்

கமலம்

முத்து

சேகர்

சுந்தரம்

துரைசாமி

## காட்சி 1

இடம் : வீட்டின் முன் அறை.

காலம் : விடியற்காலை.

உள்ளே : தந்தை சேகர்...தாய் கமலம்... மகன் முத்து.

(கமலம் கையில் காபி டப்பாவுடன் அங்கும் இங்கும் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போல, நடந்து கொண்டிருக்கிறாள். முகத்தைத்துடைத்த வாறே, சேகர் உள்ளேயிருந்து வருகிறார்.)

சேகர் : கமலம்! நானும் ரொம்ப நேரமா பார்த்துக்கிட்டே இருக்குறேன். ஏன் இப்படி நடையா நடக்குறே! கால் வலிக்கும். கொஞ்ச நேரம் உட்கார்ந்துக்கோ!

கமலம் : (ஒரு மாதிரியாக முறைத்துப் பார்த்துவிட்டு மீண்டும் நடக்கிறாள்.)

சேகர் : உட்கார்ந்துக்கோன்னுதான் சொன்னேன்! அதுக்கு ஏன் ஒரு மாதிரியா முறைக்குறே! காலையிலே (mood) மூட் சரியில்லியோ...போய்க் காபி சாப்பிடு ..சரியாப் போயிடும்.

கமலம் : காபி சாப்பிடத்தான் இந்த பாடுபடறேன்.

**சேகர் :** காபி சாப்பிட பாடா? அராபி நாட்டுக் குதிரை மாதிரி நடக்காதே! பேசாம நின்னு சொல்லு. நிற்க மாட்டியா? அப்ப நானும் நடக்குறேன்.

**கமலம் :** நீங்க ஏன் நடக்கிறீங்க? முத்து மாதிரி ஒரு மக்கு குழந்தையை பெத்து வளர்த்ததுக்கு, நான் குதிரையா தான் நடக்கனும். ஏன், என் காலையும் தான் ஒடிச்சிக்கணும்.

**சேகர் :** விவரமா சொல்லு! விடியற் காலையில, விடுகதை போடுற மாதிரி பேசிகிட்டே போறியே!

**கமலம் :** வேற ஒன்னும் இல்லிங்க! காபி பொடி தீர்ந்து போச்சு. இந்தா பாருங்க Empty டப்பா. பக்கத்து வீட்டு பார்வதி கிட்டே போய், கொஞ்சம் காபி பொடி வாங்கிட்டு வரச் சொன்னேன். போனவன் போனவன் தான். நம்ம மகனை இன்னும் காணோம்.

**சேகர் :** ஓயாம ஓசி கேட்டா யார் தான் கொடுப்பா! கொஞ்சம் லேட் பண்ணி குடுத்தா தான், திரும்பவும் கேட்க மாட்டேன்னு, உன் பையனை உட்கார வச்சிருக்கா போலிருக்கு.

**கமலம் ;** என்னை என்ன ஓசி வாங்குறவன்னு நினைச் சுட்டீங்களா! நம்ம வீட்டுல உள்ள பாதி சாமானுங்க, அந்த பார்வதியாலதான் தீர்ந்து போகுது. ஒரு நாளைக்கு இல்லேன்னு கேட்டா, இப்படியா அவ பண்ரு! வரட்டும் பேசிக்குறேன்.

**சேகர் :** (கிண்டலாக) யாரை வரட்டுங்கறே! நம்ம முத்துவையா? பார்வதியையா? டப்பாவை கீழே வச்சுடு. இல்லேன்னு இருக்குற வேகத்துலே ஏதாவது பண்ணிடப் போறே!

**கமலம் :** டிக்காஷனுக்காகப் போட்ட வென்னீர் பச்சைத் தண்ணியா போயிடுச்சு! உண்டு இல்லேன்னு வராம...காலங் கடத்துருனே கடன் காரன்! காலங் காத்தாலே இப்படியா நடக்கணும்.

[கமலம் எரிச்சலுடன் தலையில் கை வைத்துக்கொண்டு கீழே அமர்கிருள்.]

**சேகர் :** நீ தனியா உட்கார்ந்தா சோகமா தெரியல்லே! இந்தப் பக்கம் நீ உட்காரு! அந்தப் பக்கமா நான் உட்கார்ரேன். (உட்கார்ந்து கொண்டு) ஆகா! கோயில் வாசல்ல இருக்குற மாதிரியே இருக்குரேம்.

**கமலம் :** (குழைவுடன்) என்னங்க இது? எழுந்திருங்க!

**சேகர் :** என்ஞல முடியாது. என் மகனே முத்து! காபி பொடி வேண்டாம்பா... காபியோடவே வா! அப்பத் தான் என்ஞல எழுந்திருக்க முடியும்.

[இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி உட்கார்ந்திருக்கின்றனர். முத்து கையில் ஒருசிறு பொட்டலத்துடன் ஓடிவருகிருன். அவர்களைப் பார்த்ததும், அவனுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. கமலம் கோபமாக...]

**கமலம் :** ஏண்டா...சிரிக்குறே! செய்யுறதை செஞ்சிட்டு சிரிப்பு வேறயா... (டப்பாவை ஓங்குகிருள்.)

**சேகர் :** டப்பாவாலே அடிக்காதே! டப்பா நசுங்கி போயிடும். வேற டப்பா வாங்க என் கையில காசு இல்லே. (கோபமாக) டேய் முத்து! ஏண்டா சிரிக் குறே!

**முத்து :** ஒண்ணுமில்லேப்பா! நான் காபி பொடி வாங்க பார்வதி மாமி வீட்டுக்குப் போனேஞ! (சாவகாச மாக சொல்வது)

**கமலம் :** அதுதான் தெரிஞ்ச கதையாச்சே! அப்புறம் சொல்லி அழுடா! (முனகுதல்) சிரிப்பைப் பாரு! சிரிப்பை!

**முத்து :** அவங்க வீட்டுக்கு முன்னாலே ஒரு நாயும் பூனையும் சண்டை போட்டுகிட்டு இருந்ததுப்பா!

**சேகர் :** அதுக்கு நீங்க (Refree) ரெபரியா இருந்தீங்களோ!

**கமலம் :** (கிண்டலாக) ஏண்டா நிற்குறே! சொல்லு... எது ஜெயிச்சது? நாயா? பூனையா?

**முத்து :** எதுவும் ஜெயிக்கலம்மா! நான் ஒருகல்லெடுத்து பூனை மேல போட்டேன்.. பூனை பயந்துகிட்டு வீட்டுக்குள்ளே தாவுனது... எதிர்த்தாப்புல பார்வதி மாமி காப்பி டப்பாவோட வந்துகிட்டே இருந்தாங்க...பூனை தாவுனதைப் பார்த்து பயந்து, மல்லாக்க விழுந்தாங்களா. விழுந்த வேகத்துலே காபி பொடி டப்பா கவிழ்ந்து, முகம் பூரா காபி பொடி...

**கமலம் :** அய்யய்யோ!

**முத்து :** ரொம்ப தமாஷா இருந்ததும்மா! பார்வதி மாமியை பார்க்க ஆபிரிக்கா மாமி மாதிரி, ரொம்ப வேடிக்கையா இருந்தது. ஓன்னு சிரிச்சுட்டேன். நானும் ரொம்ப நேரமா...

**சேகர் :** ஏண்டா தடியா! காபி பொடி, இல்லாம போச்சேடா!

**முத்து :** இதோ இருக்குப்பா ...கீழே கிடந்ததை கூட்டித் துடைச்சி, கொண்டு வந்திருக்கேன்...

**சேகர் :** சிரிக்காதே! பல் மஞ்சளாக இருக்கு! போய் பல்லெ விளக்கிக்கோ! கொஞ்சங்கூட பொறுப்

பில்லியேடா!... ஒரு சின்ன வேலே விட்டா கூட வேடிக்கை! தமாஷ்...சிரிப்பு தான்...எப்பதான் நீ திருந்தப் போறியோ?

கமலம் : (சிரித்துக் கொன்டே) என் அப்பாவும் இப்படித்தாங்க. எப்பப் பார்த்தாலும் வேடிக்கை... தமாஷ்...சிரிப்புத்தான்.

சேகர் : போய் உங்க அப்பாகிட்ட இவனையும் சேர்த்து விடு. ரெண்டு பேரும் காலே கட்டிக்கிட்டு Three Legged Race ஓடட்டும்.

கமலம் : காலேயில காபி இல்லேன்ரு என்னம்மா கோபம் வருது...

முத்து : நான் போய் ஓட்டலில் காபி வாங்கிகிட்டு வரட்டாம்மா?... அம்மா...அந்த மாமி முகத்துல காபி பொடி... ரொம்ப தமாஷ்...

(சிரித்துக் கொண்டே ஓடுகிருன்)

கமலம் : பார்வதி முகம், வேஷம் போட்ட மாதிரி இருந் திருக்குமே!

சிரிக்கிருள் சேகரும் சேர்ந்து சிரிக் கிருர்).

## காட்சி-2

இடம்: வீட்டின் முன் அறை நேரம் : காலே 9 மணி

[சேகர் சட்டை போட்டுக் கொண்டு, பட்டன் போட்டபடி வருகிருர். மேலே இரண்டு பட்டன்கள் இல்லே. அவசரமாக தன் மனைவி, கமலத்தைக் கூப்பிடுகிருர்.]

**சேகர் :** கமலம்!! எத்தனை தடவை கூப்பிட்டாலும் ஏன்னு கேட்குற பழக்கமும் இல்லே! புத்தியும் இல்லே! சட்டையை துவைச்சா போதுமா! பட்டன் இருக்குதான்னு பார்க்க வேண்டாமா;
நான் என்ன சாண்டோவா! முண்டா பனியனோட வெளியில போக? முடியுமா!

(சுற்றுமுற்றும் போய் பார்த்துவிட்டு வருகிறார்.)

முத்தாவது இருக்கிறானே என்னவோ?

**முத்து :** (வந்து கொண்டே) இதோ வந்துட்டேம்பா...

**சேகர் :** உன் அம்மா எங்கேடா?

**முத்து :** வேலைக்காரிகிட்டே யுத்தம் பண்ணிகிட்டு இருக்காங்க. மல்யுத்தம் இல்லேப்பா...வாய் யுத்தம் தான்.

**சேகர் :** வேற வேலை இல்லையா?

**முத்து :** சமைச்சு முடிச்ச பிறகு. பொழுது போகலியாம்! அதைத்தான் நான் வேடிக்கை பார்த்துகிட்டு இருந்தேன்.

**சேகர் :** அது தான் என் காட்டுக் கத்தல்கூட, காதுல விழலியாக்கும். நான் பேசிக்குறேன்.

(முத்து வெளியே போக புறப் படுகிறான்)

முத்து! நீ எங்கேடா போறே?

**முத்து :** நீங்க தான் அம்மாகிட்ட பேசிக்குறேன்னு சொன்னீங்க? அப்புறம் என்னப்பா...நான் போறேன்,

சேகர் : நீ முதல்ல இங்கே வா! ரொம்ப அவசரம்! ஓடிப் போய் 2 பட்டன் வாங்கிவா .. வேற சட்டை இல்லேடா! வீட்டில் ஊசி இருக்குதா? அதை நான் பார்த்துக்குறேன். இந்தா காசு...ஒரு...முத்து, நைலான் பட்டன் தெரியுதா?

முத்து : சரிப்பா...இதோ வந்துடுறேன்.

சேகர் : சீக்கிரமா வரணும். ஆபீசுக்கு நான் போகணும்...புரியாதா...ஓடு...நேரமே ஆச்சு...

(முத்து போனதும் சேகர் தானே தனியாகப் பேசிக் கொண்டிருக்கிறார்)

நான் வேலைக்காரியா இருந்திருக்கக் கூடாதா! என் கூடவாவது என் மனைவி சண்டை போட்டபடி இருப்பாளே!

(கூப்பிடுதல். கோபமாக)

ஏ! கமலம்! கமலாபாய்!

கமலம் : (முகவியர்வையைதுடைத்தபடி வந்துகொண்டே) என்னங்க! கூப்பிட்டிங்களா!

சேகர் : உன்னைக் கூப்பிட்ட நேரத்துக்கு அந்த சரஸ்வதி தேவியை கூப்பிட்டிருந்தா கூட ஓடி வந்திருக்கும்!

கமலம் : கோவிச்சுக்காதீங்க... கிணற்றடியில ஒரு முக்கியமான வேலை...அதனால தான்...

சேகர் : ஆமாமா! ரொம்ப முக்கியமான வேலைதான்... வேலைக்காரியோட சண்டை போடுறது...போய் முதல்ல ஊசியை எடுத்துகிட்டுவா!

கமலம் (பயந்தபடி) ஏங்க! வாயை தச்சுடப் போறீங்களா!

**சேகர் :** நீ ஒண்ணு...என் சட்டை, வாயை திறந்து கிட்டு இருக்கு. பையன் பட்டன் வாங்கப் போயிருக்கான். பட்டன் வந்தாதான் ஆபீஸ்...

**கமலம் :** ஒரே ஒரு ஊசி இருந்தது. அதுவும் எங்கே இருக்குதுன்னு தெரியலியே! நீங்க பதறும, இந்த ஈசி சேரில உட்கார்ந்திருங்க...வந்துடுறேன்.

(போகிருள்)

**சேகர் :** (நாற்காலியில் உட்கார்ந்தபடியே)

என்ன அசதிப்பா...கொஞ்சம் கூட சாப்பிட்டுட்டா, தூக்கமே வந்துடுது. ஊசி வர்ரதுக்குள்ளே...

(கொட்டாவி விட்டபடி, கண்ணை மூடுகிருர். குறட்டை சத்தம் வருகிறது).

**கமலம் :** (வந்து கொண்டே) அதுக்குள்ளே குறட்டையா! கொஞ்ச நேரம் உட்காரவச்சா கும்ப கர்ணன் தோத்தான்.

(சிரிக்கிருள்)

**சேகர் :** (திடுக்கிட்டு விழித்து) ஏன்...என்ன? ஊசி.. முத்து...பட்டன்...இன்னும் வரலியா (உளருதல்).. எங்கே போனுனே! நானே போயிருந்தாலும் இந்நேரம் பத்து தடவை போய் திரும்பி இருப்பேன் இன்னும் வரலியே...

(முத்து உள்ளே நுழைகிருன்)

வாடா! வா!

**முத்து :** அம்மா! இனிமே நீங்க கவலையே படவேணும்.. எல்லாம் கிடைச்சுடும்.

**சேகர் :** என்னடா சொல்றே!

முத்து : இங்கிலீஷ் மீடியத்துல ஆறுவதுக்கு அட்மிஷன் கிடைச்சுடுமாம். நான் Foriegn போகக் கூட சான்ஸ் வருமாம்.

கமலம் : அப்படி யார்ரா சொன்னது?

முத்து : பத்ரகாளிம்மா!

சேகர் : பத்ரகாளியா! என்னடா உளர்றே!

முத்து : பத்ரகாளிதாப்பா...நேரா வரலே! படத்துல வந்தா.

கமலம் : பையன் போன இடத்துல பயந்துட்டானோ என்னமோ! என்னடா .. எங்கேடா வந்தா பத்ரகாளி...

முத்து : நீங்க இதுவரை குருவி ஜோசியம், கிளி சோசியம்தான் பார்த்திருப்பீங்க—நான் குரங்கு ஜோஸ்யம் பார்த்தேன். அதுலதான் பத்ரகாளி வந்தா.

சேகர் : குரங்கு ஜோஸ்யமா...

முத்து : ஆமப்பா...கடைக்குப் பக்கத்தில ஜோஸ்யக்காரன் குரங்கு வச்சிருக்கான், அது ஒவ்வொரு அட்டையா எடுத்து தருது. அதுலதாப்பா பத்ரகாளி வந்தா...அதை படிச்சான் அவன்.

சேகர் : பைத்தியம்...பைத்தியம். பட்டன் எங்கேடா?

முத்து : ஏது பட்டன்...பத்துபைசான்னுன். நாலணாவைக் கொடுத்தேன். மீதி இல்லேன்னுன். அப்புறம் வேடிக்கை பார்த்துட்டு...

சேகர் : உன்னை உதைச்சாதான் ஒழுங்குக்கு வருவே... ஆத்திரம் அவசரம் தெரியலெ...இப்ப நான் எப்படி ஆபீசுக்கு போறது?

(முத்து பயந்து, அம்மா பின்னுல் ஒளிந்து கொள்கிறுன்.)

கமலம் : என்கிட்ட ஊக்கு இருக்குது.

முத்து : என்கிட்ட குண்டுசி இருக்குது.

சேகர் : குத்திகிட்டு போகச் சொல்றீங்களா? என்ன பன்றது? இப்படி ஒரு தாய். அப்படி ஒரு மகன். சரி...போறேன். டேய் முத்து Mr. சுந்தரத்துகிட்டே அப்ளிகேஷன் கேட்டிருக்கேன். போய் வாங்கிகிட்டு வந்துடு.

முத்து : வந்துடுறேப்பா.

சேகர் : கமலம்! இவனை சரியா 4 மணிக்கு அனுப்பி வை. ம்! இவனுக்கு இந்த வருஷமாவது அட்மிஷன் கிடைக்கணும்.

முத்து : எதுக்கும், நீங்களும் ஒரு தடவை குரங்கு ஜோசியம் பாருங்கப்பா!

[சேகர் சிரிக்க, கமலமும் சேர்ந்து கொள்கிறாள். தலையில் அடித்தபடியே போகிறாள்.]

## காட்சி 3

இடம் : முன் அறை

காலம் : காலை 6-30 மணி

(கமலம் ஒரு ஓரத்தில் சோகமாக நின்றுகொண்டிருக்கிறாள், கையை பின்புறமாகக் கட்டியபடி; அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருக்கிறார் சேகர்.)

சேகர் : ஆறரை மணியாச்சு. இன்னும் வரலியே! முத்து எத்தனை மணிக்கு வீட்டிருந்து புறப்பட்டான்?

கமலம் : நாலு மணிக்கு தாங்க!

சேகர் : நல்லா தெரியுமா? இல்லே, லேட்டாதான் புறப்பட்டானு?

கமலம் : போய்ட்டு வர்ரேம்மான்னு அவன் சொன்ன போது, டாண்டாண்ணு 4 மணி அடிச்சது, எனக்கு நல்லா ஞாபகம் இருக்குதுங்க.

சேகர் : அப்புறம் ஏன் வரலே? Mr. சுந்தரத்துக்கு போன் பண்ணியிருந்தேன். அவரும் அப்ளிகேஷன் ரெடின்னு சொன்னுரே?

கமலம் : போற பாதையில ரயில்வே கிராசிங் இருக்குதே? தண்டவாளத்து மேலேயே நின்னு வர்ர ரயிலே வேடிக்கை பார்த்தாலும் பார்ப்பங்க...எனக்கென்னமோ பயமா இருக்குதுங்க...

சேகர் : கவலைப்படாதே கமலம்! நம்ம முத்து அந்த அளவுக்கு முட்டாள் இல்லே...

கமலம் : ரோடெல்லாம் பள்ளம் தோண்டி கிடக்குதே. அதில தடுக்கி விழுந்து, ஆஸ்பத்திரிக்கு...

சேகர் : நீ ஒன்னு...எந்த ஆபத்தும் அவனுக்கு வராது.

கமலம் : நீங்க போய் பார்த்துட்டு வாங்களேன். அப்ப தான் என் மனசுக்கும் ஆறுதலா இருக்கும்.

சேகர் : ஆமா! இங்கேயிருந்து பல மாதிரி நினைச்சி கவலைப்படுறதைவிட, போய் பார்த்துட்டே வந்துடுறேன் வரட்டுமா!

கமலம் : (சுவாமி படத்தை பார்த்து) முருகா! முத்துவுக்கு நீதான் துணையா இருக்கணும்...

சேகர் : நீ ஒருத்தி! அவன் என்ன காட்டுக்குப் புலி வேட்டையா ஆடப் போயிருக்கான்...கவலையை விடுவியா...

(வெளியிலிருந்து கதவு தட்டும் சத்தம் கேட்கிறது )

யாரது? கமலம்!போய் கதவை திறந்து பாரு.

(கமலம் போய் கதவை திறந்துவிடுகிறாள் பின்னால் சுந்தரமும் தோட்டக்காரன் துரைசாமியும் வருகின்றனர்.

துரைசாமி : ஐயா! என்னை மன்னிச்சுடுங்க. நான் பண்ணுனது தப்புதான். உங்க பையன்னு தெரியாம அடிச்சு!

கமலம் : அடப்பாவி? யார் நீ? ஏன் அடிச்சே! எங்கே என் பையன்?

சேகர் : சுந்தரம்! யார் இந்த ஆளு? என்ன நடந்தது? நம்ம முத்து எங்கே!

சுந்தரம் : வெட்கப்பட்டுகிட்டு வெளியே நிற்குறான்.

கமலம் : வெளியே நிற்குறானா! முத்து! (கூப்பிட்டுக் கொண்டு வெளியே ஓடுகிறாள்.)

சேகர்: சுந்தரம்! விவரமா சொல்லு...யார் இவர்?

துரைசாமி : நான் மாந்தோப்பு காவல்காரன் துரைசாமிங்க. ஏதோ ஆத்திரத்துல (தடுமாறிக் கொண்டே கன்னத்தில் போட்டுக் கொள்கிறான்.)

சுந்தரம் : மீதியை நான் சொல்றேன். 4½ மணி யாச்சு. இன்னும் முத்துவை காணோமேன்னு உங்கவீட்டுப் பக்கமா வந்தேன். மாந்தோப்பு உள்ளே முத்து அழுற சத்தம் மாதிரி கேட்டது. சந்தேகப்பட்டு உள்ளே போனா, நம்ம முத்துதான்.

துரைசாமி : ஆமாங்க! எங்க மாமரத்துல தினந்தினம் மாம்பழமெல்லாம் திருட்டு போய்கிட்டே இருந்த

துங்க. நான் எவ்வளவுதான் உஷாரா இருந்தாலும், கோட்டை விட்டுடுவேங்க. இன்னைக்கி சாயந்தரம் ஒரு பள்ளத்துல பதுங்கி இருந்து, பார்த்துகிட்டு இருந்தேங்க.

உங்க பையன் முத்து, பத்து பன்னிரெண்டு மாம்பழத்தை மரத்தடியில் வச்சுகிட்டு நின்னதை பார்த்துட்டு, ஓடிப் போய், பக்குன்னு புடிச்சிகிட்டேன்.

**சுந்தரம் :** முத்துவை திருட்டுப் பையன்னு புடிச்சதும்...

**சேகர் :** போட்டு அடி அடின்னு அடிச்சிட்டியாக்கும். ஏம்பா, ரொம்ப அடிச்சிட்டியா?

**துரைசாமி :** கையை தாங்க ஓங்கினேன். அதுக்குள்ளே கொலை பண்ற மாதிரி சத்தம். அப்புறம் அடிக்க மனசு வரலீங்க.

**சேகர் :** நீ அவனை நல்லா அடிச்சிருக்கனும். மரமோட மரமா கட்டிவச்சுட்டு நீ இங்கே வந்திருக்கனும். அப்பதான் எனக்கு சந்தோஷமா இருந்திருக்கும். துசைாமி! நீ பயப்பட வேண்டாம். நீ செய்தது சரிதான்.

(கமலம் முத்துவை அழைத்துக்கொண்டு உள்ளே வருகிறான். முத்து பயந்தபடி தாயை அணைத்துக்கொள்கிறான்.)

**கமலம் :** என்னங்க இப்படி பேசுறீங்க!

**சேகர் :** ஆமா! நம்ம பையன் முட்டாளா இருக்கலாம். முரட்டுப் பையனு வாழலாம். ஆனு திருட்டுப் பையனு இருக்கக் கூடாது.

**முத்து :** (அழுது கொண்டே) நான் திருடலேப்பா! நான் சத்தியமா திருடலே.

**சேகர் :** பின்னே, உன் காலடியில எப்படி மாம்பழம் வந்தது? தானு வந்து விழுந்ததா? இல்லே அணில் பறிச்சுப் போட்டதா?

**கமலம் :** உண்மையை சொல்லுப்பா...

**சுந்தரம் :** வழக்கமா திருடுற பசங்க, மூணு பேரு மாமரத்துல ஏர்றதை, முத்து வர்ரப்ப பாத்திருக்கான்.

**முத்து :** அவனுங்க மரம் ஏர்ற ஸ்டைல் நல்லா இருந்தது. அப்படியே பார்த்துகிட்டே நின்னேன்.

**சுந்தரம் :** அப்புறம், அவனையறியாமலே. மரத்துக்குக் கீழேயே போயிருக்கான். மாம்பழத்தைப் பார்த்ததும், சாப்பிடணும்னு ஆசை.

**முத்து :** டேய் டேய்! ஒரு பழம் போடுங்கடான்னு கத்தினேன். அந்தப்பசங்க, பொத்து பொத்துன்னு பறிச்சு போட்டு கிட்டே இருந்தானுங்க...

**துரைசாமி :** என்னடா சத்தம் கேட்குதுன்னு நான் ஓடி வந்தேங்க.. மத்த பசங்க ஓடிட்டானுங்க.. முத்து மட்டும் தான் சிக்குனது. வந்த கோபத்துல, வந்த கோபத்துல...

**கமலம் :** ஏப்பா! அடிச்சு நொறுக்கிட்டியா! பழம் கேட்டது தப்பா...

**சேகர் :** பழம் கேட்டது தப்பில்லே. மரத்துக்காரன் கிட்டே கேட்டிருந்தா, மதிப்பாவே கிடைச்சிருக்கும்.

திருட்டுப் பசங்க கிட்டே கேட்டான். அது திருட்டுப் பழம்தானே.

முத்து : நான் பழத்தை தொடக் கூட இல்லப்பா!

சேகர் : நீ திருடவேணும். திருட்டைப் பார்த்துகிட்டு தானே இருந்தே! அதுல பங்கு கேட்குற மாதிரி தானே, பழத்தைக் கேட்டே! அதுக்குதான் தண்டனை. துரைசாமி! நீங்க போகலாம்.

துரைசாமி : நான் வர்ரேங்க. அம்மா வர்ரேன்! முத்து வரட்டுமா! அந்தப் பக்கமா வந்தா வா! நல்லபழமா பறிச்சுத் தர்ரேன்.

முத்து : அய்யய்யோ! நான் வரமாட்டேன். (முதுகைத் தடவிக் கொள்கிறான்). வேடிக்கை பார்க்கப் போனதுக்கே இந்த உதைன்னு, நிஜமாவே திருடுனு எப்படி இருக்கும். ஏம்மா?

கமலம் : முத்து! வென்னீர் போட்டிருக்கேன்.

சுந்தரம் : வென்னீர்ல குளிக்குற அளவுக்கு அவ்வளவு உதை இல்லீங்க.

கமலம் : குளிக்க இல்லீங்க...குடிக்க. டிக்கு டிக்காஷன்.

(உள்ளே போகிறாள்)

சேகர் : முத்து! வாயேன் கடை வீதிக்குப் போய் ஜோஸ்யம்,வேடிக்கை பார்த்துட்டு வரலாம்.

முத்து : அய்யய்யோ! நான் மாட்டேன். எங்கே போனாலும்நேரா போய் நேரா வந்துடுவேன். இனிமே

வேடிக்கை பார்த்தா, முதுகை Bend எடுத்திடு வாங்க...

(உடலை குலுக்கியவாறு அம்மா போன திசை நோக்கி ஓடுகிறான்)

**சேகர் :** சொல்லி, சொல்லிப் பார்த்தேன். நடக்குலெ. ஒரு தோட்டக்காரன் சரிப்பண்ணிட்டான். துரைசாமி நீ வாழ்க! மாம்பழமே நீ வாழ்க!

(இருவரும் சிரிக்கின்றனர்)

திரை

# அவசரம்



# கதை மாந்தர்கள்

ராமு

அலமேலு

நாகசாமி

பாபு

சோமு

முனுசாமி

## காட்சி 1

**இடம் : வீட்டின் முன் அறை** **காலம் : காலை**

**உள்ளே :** ராமு, அலமேலு, நாகசாமி, பாபு

(வேலைக்காரன் ராமு, சாமி படத்தின் முன்னே நின்று வணங்குகிறான்.)

**ராமு :** முருகா! என் அம்மாவுக்கு உடம்பு சுகமில்லே. அவங்க பக்கத்தில் இருந்து பார்த்துக்க எனக்கு முடியலே. நேரமில்லே! தம்பி பார்த்துக்குறான். நீதான் எங்களை காப்பாத்தனும்.

(எஜமானி அலமேலு கூப்பிட்டுக் கொண்டே உள்ளே வருகிறாள்)

**அலமேலு :** ராமு! ராமு! ஏண்டா! இங்கே நின்னுகிட்டு என்ன பண்றே?

**ராமு :** சாமி கும்பிட்டுக்கிட்டு இருக்கேம்மா!

**அலமேலு :** நீ வேலைக்காரன். வேலை செய்ய இங்கெ வந்திருக்கே. சாமி கும்பிட்டுகிட்டு நிக்க, இது என்ன சத்திரமா, சாவடியா?

**ராமு :** இது வீடு மட்டும் இல்லேம்மா. எனக்கு கோயில்.

**அலமேலு :** சொல்றதுக்கெல்லாம் பதில் சொல்லாட்டி, உனக்கு தலையே வெடிச்சுடும். போய், பூச்செடிக்கு தண்ணீர் ஊத்து. போ. போ. நிற்காதே. நேரமே ஆச்சு!

ராமு : இதோ போறேம்மா.

(ராமு உள்ளே போகிறுன்)
(அலமேலு சலிப்புடன் பேசுகிறுள்)

அலமேலு : இவனை விரட்டி விரட்டி வேலே வாங்குறக் குள்ளே, உயிர் போயிட்டு உயிர் வந்துடுது.

(நாகசாமி வருகிறுர்)

நாகசாமி : அமைதியா தான் இரேன். என்ன அவசரம்? இப்ப என்ன குடியா ம்முழுகிடுச்சு...

(கிண்டலாக பேசுகிறுர்)

அலமேலு : நீங்க ஆபீஸ் போகணும். பாபு பிக்னிக் போகணும். எனக்கு வேலே ஆகணும்.

நாகசாமி : அவசரப்பட்டாலும், ஆத்திரப்பட்டாலும், நடக்குறதுதான் நடக்கும். தெரிஞ்சுக்க!

அலமேலு : ராமுவை திட்டுனு உங்களுக்கு கோபம். அவனுக்கு நீங்க நல்லவரா ஆயிடுறீங்க. நான் தான் பொல்லாதவளா போறேன்.

நாகசாமி : அதுக்காக சொல்லலே ..

அலமேலு : உங்களுக்கு அவன் தான் ஒசத்தி. டேய் ராமு! இங்கே வாடா! ஐயா கிட்டே பேசிகிட்டே இரு. அதுவே...போதும். சீக்கிரம் வாப்பா!

(ராமு உள்ளே வர, அலமேலு போகிறுள்)

ராமு : ஐயா. உங்களே பார்க்கனும்னு நினைச்சேன் அம்மாவும் கூப்பிட்டாங்க.

நாகசாமி : என்னப்பா விஷயம்?

ராமு : என் அம்மாவுக்கு உடம்பு சுகம் இல்லிங்க. டாக்டர் சொன்ருருங்க. மருந்து வாங்க 30 ரூபா ஆகுமாம்.

**நாகசாமி :** (எரிச்சலாக) கடன் வேணுமா! ஏற்கனவே 100 ரூபா கடன் இருக்குது. இதுக்குமேல் முன் பணம் தரக்கூடாது. தரவும் முடியாது.

**ராமு :** ஐயா!

**நாகசாமி :** (கோபத்துடன்) பணம் இல்லே...வேற பேச்சு இருந்தா பேசு...

**ராமு :** ஐயா...(கெஞ்சுகிறான்)

**நாகசாமி :** போய் வேலைய கவனி...கொஞ்சம் இடம் கொடுத்து மடத்தை பிடிப்பானுங்க இவனுங்க.

*(உள்ளே போகிறார். ராமு அங்கேயே நிற்கிறான். அலமேலு வருகிறாள்.)*

**அலமேலு :** பணத்தை நினைச்சுகிட்டே நின்னா எப்படி? போப்பா. போய் வேலையெ பாரு.

*(நாகசாமி திரும்பி வந்து)*

**நாகசாமி :** ராமு. இந்தா (100 ரூபா நோட்டைத் தருகிறார்) அவசரமா வேணும்—இந்தா சீட்டு. மருந்து வாங்கிகிட்டு ஓடிவா...

**ராமு :** (ஆசையாக) யாருக்கு எசமான்?

**அலமேலு :** உங்க அம்மாவுக்குன்னு பார்த்தியா! ஐயாவுக்குத்தான். ஓடு சீக்கிரம்.

*(ராமு புறப்படும்போது.)*

**பாபு :** ராமு. இரு! எங்கே போற?

*(பாபு ஷூவுடன் வருகிறான்.)*

**ராமு :** மருந்து வாங்கப் போறேன்.

**பாபு :** ஷூவுக்கு ஏன் பாலீஷ் போடலே?

**ராமு :** நேத்து போட்டேனே...

பாபு : இல்லவே இல்லே. நான் பிக்னிக் போகனும். பார்த்தியா...ஷூவெல்லாம் எள்ளுபுண்ணுக்கு மாதிரி கருப்பா இருக்கு. உன் மூஞ்சி மாதிரி!

அலமேலு : சரி இருக்கட்டும் பாபு. ராமு போய் மருந்து வாங்கி வரட்டும்.

பாபு : எனக்கு ரொம்ப அவசரம்மா. லேட்டா போனு திட்டுவாங்க. ரொம்ப அவமானமா போயிடும்.

நாகசாமி : பரவாயில்லே...அப்பாவுக்கு மருந்து முக்கியம் இல்லியா...

பாபு : எனக்கு நான் தாம்மா முக்கியம், ராமு...! சீக்கிரம் பாலிஷ் போடு.

அலமேலு : டேய், என்னடா பேசுறே?

நாகசாமி : நாம குடுக்குற செல்லம். அவன் அப்படித் தான் பேசுவான்.

அலமேலு : ஒரே பையனுங்க ..

நாகசாமி : இதுவும் பேசுவான்...இன்னமும் பேசுவான். ...ராமு...பாலிஷ் போட்டுட்டு சீக்கிரம் போய்ட்டு வா.

ராமு : இதோ ஆச்சுங்க ..(துடைக்கிறன்)

(நாகசாமி மோதிரங்களைக் கழற்றுகிறார்.)

நாகசாமி : அலமேலு பத்திரமா வை. விரல் கொஞ்சம் வலிக்கிறாப் போல இருக்கு. பத்திரம். ம்...நான் அடிக்கடி மறந்தே போயிடுறேன். நான் போய் பக்கத்திலே ஒரு நண்பரை பார்த்துட்டு வந்துடறேன்...

ராமு : அம்மா. நான் போய்ட்டு மருந்து வாங்கிட்டு வந்துடுறேம்மா.

(ராமு போகிறான்)

பாபு : அம்மா! குடும்மா. மோதிரத்தை நான் போட்டு பார்க்குகிறேன்.

அலமேலு : வேண்டாம். அப்பா திட்டுவாரு!

பாபு : ஏன் திட்டனும்? அப்பாவுடையது எல்லாம் என்னுது தானே.

அலமேலு : அதெப்படி! அவரா பார்த்து கொடுத்தா நான் நீ வச்சுக்கலாம்.

பாபு : தரலேன்னா, நானே எடுத்துக்குவேன்.

அலமேலு : ஏண்டா பிடிவாதம் பிடிக்குறே! பிக்னிக் போக வேணுமா! வா. டிபன் தர்றேன்...

பாபு : அம்மா...இந்த ஷூவைக் கொஞ்சம் கட்டி விடேன். குனிய முடியலே!

அலமேலு : அப்படியா! இப்படி நில்லு. கட்டி விடுறேன்!

(மோதிரத்தை அருகில் உள்ள மேசை மீது வைத்துவிட்டுக் குனிந்தவாறு கட்டி விடுகிறாள்)

பாபு : அம்மா! வாம்மா பசிக்குது...

அலமேலு : சமத்து...பசிக்குதுன்னு நீ சொல்றதை இப்பதான் கேட்குறேன். நிறையா சாப்புடு...

பாபு : வாம்மா சீக்கிரம்...

அலமேலு : உனக்கு எப்பவும் அவசரந்தான்.

பாபு : பசி வந்தா

**அலமேலு :** பத்தும் பறக்கும்னு சொல்வாங்க. இதோ நானும் பறக்குறேன்.

(இருவரும் சிரித்துக் கொண்டே உள்ளே போகின்றனர். மோதிரம் இரண்டும் மேசைமீதே இருக்கின்றன.)

**—திரை—**

## காட்சி 2

**இடம் :** . முன் அறை.

**உள்ளே :** அலமேலு, நாகசாமி, ராமு, சோமு, பாபு, முனுசாமி.

(நாகசாமி ஆபீசில் இருந்த கைப்பெட்டியுடன் உள்ளே நுழைகிறார்·)

**நாகசாமி :** அலமேலு! மோதிரத்தை எடு. போட்டுக்கிறேன்.

**அலமேலு :** ஆமாங்க. எனக்கும் இப்பத்தான் ஞாபகம் வருது.

**நாகசாமி :** சீக்கிரம் எடு. நான் வெளியே அவசரமா போகணும்.

**அலமேலு :** (யோசனையுடன்)எங்கேயோ வச்சேனே? ..ம் ...இந்த மேசை மேலதானே வச்சேன். ராமு! ராமு! இங்கே வா? இங்கே மோதிரம் வச்சேனே... எடுத்தியா?

(ராமு ஓடி வருகிறான்)

**ராமு :** நான் பார்க்கவே இல்லிங்களே?

அலமேலு : நான் எடுத்தியான்னு கேட்குறேன். நீ பார்க்கவே இல்லேங்குறியே?

ராமு : நான் இந்த ஹால் பக்கம் வரவே இல்லேம்மா!

அலமேலு : இந்த வீட்டுல நீ. நான். நம்ம ரெண்டு பேரைத் தவிர வேறு யாருமே இல்லே! ஒன்னு நீ எடுத்திருக்கனும், இல்லே நான் திருடியிருக்கனும்.

ராமு : எனக்கு நிஜம்மா தெரியாதும்மா.

நாகசாமி: ராமு! பயப்படாம சொல்லு.

ராமு : எனக்குத் தெரியாது எசமான்...

அலமேலு : மரியாதையா கேட்டா தர மாட்டேல்லே! கேட்குறபடி கேட்டாத்தான் குடுப்பியா? என்னங்க, ஏன் பேசாம இருக்குறீங்க?

நாகசாமி : அவசரப்படாம யோசிச்சுப் பாரு. அலமேலு!

அலமேலு : இந்த மேசைமேலதான் வச்சேன். மறந்தாப்புல உள்ளே போய்ட்டேன். வந்து பார்த்தா, காணலிங்க...

நாகசாமி : ராமு! (கோபமாக)

ராமு : எச்மான்... எனக்கு இப்படி எல்லாம் பழக்கம் இல்லிங்க.

அலமேலு : ஆறு? பொய் சொல்லத் தெரியும். டேய்! ராமு ! உங்க அம்மாவுக்கு மருந்து வாங்க பணம் தேவைதானே!

ராமு : ஆமா!

**அலமேலு :** ஐயாகிட்ட கேட்டே? பணம் இல்லேன்னு சொல்லிட்டாரு.

**ராமு :** ஆமாம்மா ?

**அலமேலு :** மோதிரம் மேசைமேல இருந்தது. பார்த்தே! எடுத்துக்கிட்டே...

**ராமு :** இது பொய்மா...

**அலமேலு :** பொய்யுன்னு சொல்றே? என்னங்க! கேட்டுக்கிட்டுச் சும்மா நிற்குறீங்களே...சீக்கிரம்.

**நாகசாமி :** அவசரம் வேண்டாம். இன்னும் தீர விசாரிப்போம்.

**அலமேலு :** இந்நேரம் திருடுனது என் பையனு இருந்தா, அடிச்சே தீர்த்திருப்பேன். இவன் யாரு பெத்த பையனே! என்னையே பொய்காரின்னு சொல்ருனே!

**நாகசாமி :** (கோபமாக) ராமு! மரியாதையா கேட்குறேன். எங்கேடா என் மோதிரம்.

(ராமுவின் தம்பி சோமு உள்ளே நுழைகிருன்.)

**சோமு :** இதோ இங்கே இருக்குங்க?

**நாகசாமி :** யார்ரா நீ?

**ராமு :** என் தம்பிங்க!

**சோமு :** இந்தாம்மா மோதிரம்.

**நாகசாமி :** உனக்கு ஏது இந்த மோதிரம்?

**சோமு :** இந்த மேசைமேல இருந்தது. நான்தான் எடுத்தேன்.

**அலமேலு :** எப்போ எடுத்தே?

**சோமு :** மருந்து வாங்க பணம் வேணும்னு என் அண்ணன்கிட்ட கேட்க வந்தேன். நீங்க பணம் இல்லேன்னு சொன்னதை கேட்டேன். ஆனா, ஒங்களுக்கு மருந்துவாங்க பணம் தந்ததை பார்த்தேன்.

**நாகசாமி :** அப்புறம்...

**சோமு :** எனக்கு ரொம்ப அவசரம். வேற வழியில்லே. வீட்டுக்குள்ளே வந்தேன். மோதிரத்தைப் பார்த்தேன். எடுத்தேன். ஓடிட்டேன்.

**அலமேலு :** இப்ப எப்படி வந்தே?

**சோமு :** டாக்டரே மருந்தை கொடுத்துட்டாரு. பணம் எனக்குத் தேவையில்லே. அதனாலே, திருப்பித் தரலாம்னு வந்தேன்.

**ராமு :** டேய் சோமு! இப்படி பண்ணினது தப்பு இல்லியா?

**சோமு :** அண்ணா? நான் செஞ்சது தப்புதான். என்னை மன்னிச்சுடு. (அலமேலுவை பார்த்து) அம்மா! தண்டனை எது கொடுத்தாலும் நான் வாங்கிக்கிறேன்.

**அலமேலு :** இன்னொரு மோதிரம் எங்கேடா?

**சோமு :** நான் எடுத்தது ஒன்னுதாம்மா!

**நாகசாமி :** ரெண்டு இருந்திருக்குமே?

**சோமு :** இருந்தது ரெண்டுதான். ஆனா நான் எடுத்தது ஒன்னுதாங்க.

அலமேலு : என்னங்க? அவன் பேசறதைப் பார்த்தீங்களா?இவனுக்குச் சரியான தண்டனை தந்தாகனும்!

சோமு : சீக்கிரம்மா! நான் பண்ணுன தப்புக்கு தண்டனையா எது கொடுத்தாலும் வாங்கிக்கிறேன்.

(வெளியேயிருந்து பாபுவின் குரல்.

பாபு : டேய்? என்னை விடுடா! விடுடா...

அலமேலு : பாபு! என்னடா இது...இந்தாப்பா கழுத்தை விடு...கழுத்தை நெறிச்சு கொன்னுடுவே போல இருக்கே! யார் நீ? என்ன நினைச்சுக்கிட்டு இருக்கே...

பாபு : அம்மா...இவன் என்னை அடிக்க வர்ரான்...

நாகசாமி : இந்தாப்பா (அதட்டுகிறார்)

முனுசாமி : ஐயா. என்னை மன்னிக்கனும். நான் ஐஸ் கிரீம் விக்கிறவங்க. எனக்கு ஒங்க பையன் 10 ரூபா வரைக்கும் கடன் தரனும்.

அலமேலு : ஏண்டா பாபு ..உண்மையா?

பாபு : (ஆமா என்று தலையை ஆட்டுகிறான்)

முனுசாமி : காலையில கடனை கண்டிப்பாகேட்டேனுங்க! கொஞ்சம் கோபமாவேகேட்டேனுங்க. இந்த மோதிரத்தைக் கழட்டித் தருதுங்க ...அதனாலேதான் கையோட கொண்டாந்துட்டேன்.

நாகசாமி : பாபு? என்னடா? அவன் சொல்றது உண்மையா?

பாபு' (தலையை ஆட்டுகிறான்)

நாசாமி : இந்தா 10 ரூபா...நீ போப்பா! இனிமேபள்ளிக் கூடத்து பையன்களுக்கு கடன் கொடுக்காதே! போப்பா!

(வாங்கிவிட்டு முனுசாமி போகிறுன்)

சோமு : ஐயா! சீக்கிரம் எனக்கு தண்டனை கொடுங்க!

அலமேலு : பாபு ..கேட்டியாடா? சொந்த வீட்டுலயே தப்பு பண்ணிட்டு, எங்களேயே அவமானப்பட வச்சுட்டியே?

ராமு : ஐயா! என் தம்பியை மன்னிச்சுடுங்க. அம்மா வுக்காகத்தான் இப்படித் தப்பு செய்திருக்கான்.

நாகசாமி : என் பையனும் அதே தப்பைச் செய்திருக் கான்; தப்பு ஒன்னுதான். ஆள்தான் வேறே. தம்பி சோமு! நீ வீட்டுக்கு போப்பா...

ராமு : ஐயா! நான் வர்ரேங்க. அம்மா! நான் வர்ரேம்மா!

அலமேலு : ராமு! எங்கே போறே? ஒன்னும் மனசுல வச்சுக்காதே!

ராமு : மனசுல சந்தேகம் வந்தாச்சும்மா...இனிமே இங்கே இருக்கிறது நல்லா இல்லிங்க ..

அலமேலு ! அவசரப்பட்டு பேசிட்டேம்பா...தீர விசாரிக் காம ஒரு முடிவுக்கு வந்துட்டேன்.

சோமு : படிக்காத பையன்தான் நானு...ஆனு பொய் சொல்லமாட்டேம்மா...

பாபு : நான் படிச்சிருந்தும் பொய் சொல்லிட்டேன்! அம்மா! நான் இனிமே நல்ல புள்ளேயா நடந்துக்கு வேன்.

6

**நாகசாமி:** ராமு! சோமு! நீங்க ரெண்டு பேரும் இனிமே என் வீட்டிலேயே இருக்கலாம்.

**அலமேலு:** வாங்க. அவங்க அம்மாவை போய் பார்த்துட்டு வருவோம்.

**பாபு:** அம்மாவுக்கு எப்பவும் அவசரந்தான்!

**நாகசாமி :** அவசரம் தான் அலமேலு. அலமேலு தான் அவசரம்.

**அலமேலு :** அவசரப்பட்டு வாங்கி கட்டிகிட்டதும் போதும். இனிமே அவசரமே படமாட்டேன். வாங்க நேரமாச்சு. அவசரமா போய்ட்டு வீட்டுக்குத் திரும்பனும்.

**பாபு :** அவசரமாவா?

(எல்லோரும் சிரிக்கின்றனர்)

(திரை)

# மனிதருக்குத் தோழன்!

# கதை மாந்தர்கள்

வடிவேலன்

கோமளா

நாகம்மா

மோகன்

## காட்சி 1

இடம் : வடிவேலன் வீடு

காலம் : மாலை நேரம்

உள்ளே : வடிவேலன், கோமளா, நாகம்மா, மோகன்

(வடிவேலன், வீட்டுவாசலில் வந்து நிற்கிறார். அவர்மனைவி கோமளா, ஆவலுடன் வரவேற்க நின்றுகொண்டிருக்கிறாள்.)

**கோமளா :** வாங்க... வாங்க!...ஏன் அப்படியே நிற்குறீங்க?

(வடிவேலன் அவளை பார்த்துவிட்டு, வீடு முழுவதையும் ஒருமுறை பார்க்கிறார்)

இது நம்ம வீடுதாங்க. சரியாத்தான் வந்திருக்கறீங்க. சந்தேகமே வேண்டாம்! (சிரித்துக்கொள்கிறாள்) நீங்க உள்ளே வரலாம். ஆட்சேபணை இல்லே.

**வடிவேலன் :** (பெருமூச்சுடன்) வர்ரேன்...வராம எங்க போகப் போறேன்...வர்றேன்.

**கோமளா :** உட்காருங்க...(சோபாவைக் காட்டுகிறாள். வடிவேலன் முகத்தைத் துடைத்தவாறு உட்கார்ந்து, விரல்களை நெட்டி முறித்துக் கொள்கிறார். புறங் கையை தலையில் பின்புறம் கட்டி,

அண்ணாந்தவாறு பெருமூச்சு விடுகிறார்) அடேயப்பா...! என்னென்னமோ பண்றீங்க.. எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கே.

**வடிவேலன் :** (அவளைக் கவனிக்காமலே) ஓ...மை காட்...

**கோமளா :** என்னங்க ரொம்ப களைப்பா இருக்குறீங்களா? கொஞ்ச நேரத்தில் ஸ்டிராங் டீ போட்டுக் கொண்டு வர்ரேன். வரட்டுங்களா!

**வடிவேலன் :** வேண்டாம் கோமளா...டீயும், காப்பியும் எனக்கு எந்தத் தெம்பும் தராது. எனக்கு எதுவும் வேண்டாம்...ஆமா!...எதுவுமே வேண்டாம்.

**கோமளா :** வேண்டாம்னு... எப்படிங்க?... டீயைத்தான் குடிக்க மறுக்குறீங்க!...நீங்க வழக்கமா விரும்பி சாப்புடுற ஓமப்பொடி பண்ணியிருக்கேன்... அதையாவது கொண்டு வரட்டுமா?

**வடிவேலன் :** இப்பொ நான் டிபன் சாப்புடுற மூடுல இல்லே... தயவு செய்து என்னை தனியா விட்டுடு...

**கோமளா :** அதெப்படி முடியும் ..சிரிச்ச முகமா ஆபீஸ்ல இருந்து திரும்புற நீங்க, இன்னைக்கு எதையோ பறி கொடுத்துட்டு வந்த மாதிரி இருக்குறீங்க. நான் எட்டிப் போயிட்டாலும், என் மனசு சும்மா இருந்துடுமா? என்ன நடந்ததுன்னு ஒரே வரியில் சொல்லிட்டா, இங்க நிற்குல! ஓடியே போயிடுறேன்!

**வடிவேலன் :** சொல்ற நிலைமையில நான் இல்லே...நீ பத்தாயிரம் தடவை கேட்டாலும்,உனக்குப் பதிலே கிடைக்காது. நீ போகலாம்.

**கோமளா :** நீங்க சொல்லவும் வேணும்....நான் கேட்கப் போறதும் இல்லே.காலையில இருந்து உங்களுக்காக

காத்துகிட்டு இருந்தேன் பாருங்க!...எனக்கு இதுவும் வேணும்...இன்னமும் வேணும்.

வடிவேலன் : கோமளா...நிலைமை புரியாம பேசுறியே .. எனக்கு மனசு சரியில்லே...போதுமா...ஒரே வரியில் பதில் வந்துடுச்சு...நீ போகலாம்...

கோமளா : மனசு சரியில்லேன்னு, ஏதோ நடக்கக் கூடாதது நடந்திருக்கு!... (பக்கத்தில் போய் அவரை பார்த்தபடி) ஏங்க...இன்னைக்கு 1ந் தேதி யாச்சே!... சம்பளக் கவரை, பஸ்ல பிக்பாக்கெட் அடிச்சுட்டாங்களா?

வடிவேலன் : (வருத்தம் கலந்த புன்னகையுடன்) பதறிப் போயிடாதே...பணம் இன்னைக்கு வரும். போகும். அதுக்கெல்லாம் கவலைப்பட்டா முடியுமா? இந்தா சம்பளக் கவர்.

கோமளா : நான் என்ன பணம்னு 'ஆங்குறவன்னு' நினைச்சிங்களா? பணம் பறிபோச்சான்னு கேட்டேன். பதறிப் போயிடாதேன்னு பரிதாபமா சொல்றிங்களே!... அதை நீங்களே வச்சுகங்க. எனக்கு வேண்டியது காரணந்தான். பணம் இல்லே!

வடிவேலன் : காரணம் ஆயிரம் இருக்கும்...எதைச் சொல்றது...எதை விடுறதுன்னுதான் எனக்கும் புரியலே ..உனக்கும் புரியலே...

கோமளா : ஏங்க...ஒரு கடன்காரன் ஆயிரம் ரூபா தர்ரதா நேத்து சொல்லியிருந்தானே! வழக்கம் போல இன்னைக்கும் வராம ஏமாத்திட்டானு? இல்ல வந்து தகராறு பண்ணி...

**வடிவேலன் :** நீ நினைக்குற மாதிரி அவன் ஒன்னும் தகராறு ஆசாமி இல்லே...இதோ அவன் கொடுத்த செக்! வச்சுக்கோ.

**கோமளா :** இந்தப் பணமும் செக்கும் என்னை சமாதானப் படுத்திடும்னு நினைச்சா— என்னை நீங்க இன்னும் புரிஞ்சிக்கிலேன்னுதான் அர்த்தம். இப்ப நீங்க ஏமாந்திட்டிங்க...ம்...

(சிரிக்கிருள்)

**வடிவேலன் :** ஏமாந்தவன் நான்தான். நம்பி ஏமாந்துட்டேன். யாரை ரொம்ப உயர்வா நினைச்சிருந்தேனோ, ...அவனே என்னை ஏமாத்திட்டான்...நானும் ஏமாந்து போய்ட்டேன்!

**கோமளா :** யாருங்க?...உங்க ஆபிசரா...உங்களுக்கு நியாயமா கிடைக்குற புரமோஷனை இல்லேன்னு சொல்லிட்டாரா? இன்னைக்கு தர்ரதாக சொல்லியிருந்தாரே... தரலியா? யாரையும் நம்பாதீங்கன்னு சொன்னு கேட்குறீங்களா? எப்பப் பார்த்தாலும் அவரை இந்திரன் சந்திரன்னு புகழ்ந்தீங்க... இப்ப என்ன ஆச்சு...

**வடிவேலன் :** ஆபீசரைப் பத்தி தப்பா பேசினு, வாய் அழுகிப் போயிடும். எனக்கு புரமோஷன் கிடைச்சாச்சு. இந்தா புரமோஷன் ஆர்டர்.

**கோமளா :** எல்லாமே வந்தாச்சு. கிடைச்சிடுச்சுன்னு சொல்லிக்கிட்டே இருக்குறீங்க. அப்புறம் என்ன கவலை வந்துடுச்சு. நீங்க சொல்லலேன்னு, இந்த வீட்டுல நான் இருக்கப் போறதில்லே.

**வடிவேலன் :** எனக்கும் இங்கு இருக்கவே பிடிக்கல்லே... இந்த வீடும், இந்தக் கூடும் (உடலைக் காட்டி) எம்மாத்திரம்.. புறப்படு போகலாம்.

**கோமளா :** இதோ! ஒரு நிமிஷத்துல டிரஸ் மாத்திகிட்டு வந்துடுறேன். உங்களுக்குப் புடிச்ச பச்சைக் கலர் பட்டுப் புடவைய கட்டிகிட்டு வந்துடுறேன். ஒரே நிமிஷம்...(ஓடுகிருள்)

**வடிவேலன் :** கோமளா... (கூப்பிடுகின்ருர்... கோமளா திரும்பி வருகிருள்...கலவரமான முகத்துடன்) வீட்டை விட்டு வெளியே போறதுக்கு பட்டுப் புடவை போதும். உலகத்தைவிட்டு போறதுக்கு எந்தப் புடவையாயிருந்தா என்னம்மா!..காதறுந்த ஊசியும், வாராதுகாண் கடைவழிக்கே...ஆகா... எவ்வளவு அருமையான பாட்டு...

**கோமளா :** இதெ பாட்டுன்னு சொல்றீங்க! பாட்டு இல்லீங்க! உங்களுக்கு வர்ர வழியிலே ஏதோ பிடிச்சிருக்கு... டாக்டருக்கு போன் பண்றேன்— (டயல் செய்கிருள். ஹலோ! ராங் நம்பரா? டக் கென்று வைக்கிருள்.)

**வடிவேலன் :** நம்பர் ராங் இல்லே கோமளா! உன் நெஞ்சுல தான் ராங்...டாக்டர் வந்தாலும், பூசாரி வந்தாலும் என் பிரச்சினையை தீர்க்க முடியாது.

**கோமளா :** என்ன பிரச்சினைன்னு சொல்லுங்க! ஏன் என்னை குழப்பிக் கொல்றீங்க? இன்னம் இரண்டு நிமிஷத்துல சொல்லுல, என் தலை வெடிச்சுடும்!

**வடிவேலன் :** எனக்கே என் தலை வெடிக்காம இருக்குதுன்னு ஆச்சரியமா இருக்குது! நீ கவலைப்படாதே! சரியா போயிடும். போய் ரெஸ்ட் எடுத்துக்கோ.

**கோமளா :** மெஸ்மரிசம் பண்றீங்களா? பிரச்சினை என்னன்னு சொல்லுங்கண்ணு, (கோபமாக), சொல்லப் போறீங்களா இல்லே! (இருவரும் ஒருவரை பார்த்தபடி நிற்கின்றனர்) சொல்லப்போறீங்களா

இல்லே, நான் சொல்லட்டுமா? (வெளியில் இருந்து வேலைக்காரியின் குரல் கேட்கிறது.)

**நாகம்மா :** அம்மா! (உள்ளே வந்து எசமானனைப் பார்த்ததும், அச்சத்துடன் பின் வாங்கிப் போகிருள்) அம்மா! அம்மா! நான் அப்புறமா வர்றேன்!

**கோமளா :** நீயாவது சொல்லுடி! அதையாவது கேட்குறேன்! நீயும் சொல்லாம போயிட்டியாணு, அப்புறம் எனக்கு பைத்தியமே புடிச்சிடும்.

**நாகம்மா :** ஒன்னும் இல்லேம்மா! என் புருஷன் ஊருக்கு போய்ட்டு வந்திருக்காரு.நான் வேலைக்கு வரமுடியாதுன்னு சொல்லலாம்னு. இன்னைக்கு மட்டும் லீவு குடுத்தா, எக்சிபிசன் போகலாம்னு! (கோமளா பேசாமல் இருக்கவே) நீங்க பார்க்குறதை பார்த்தா கோபப்படுற மாதிரி இருக்கு! ஒருநாள்மட்டும் தாங்கம்மா! காலையில் வந்துடுறேன்.

**கோமளா :** காலையில நாங்க இருக்க மாட்டோம்! ஏன்னு, நாங்களே போறதாகத்தான் இருக்கோம்! இல்லீங்களா! (கணவனைப் பார்த்து)

**நாகம்மா :** எப்போ திரும்பி வருவீங்கம்மா! திடீர்னு நீங்க சொல்றீங்க! ஆச்சரியமா இருக்கு.

**கோமளா :** நாகு! இதுலென்னடி ஆச்சரியம்! நீயாவது போய் சந்தோஷமா இரு! இன்னும் கொஞ்ச நேரம் இங்கே இருந்தா, உனக்கும் என்னை மாதிரி ஆயிடும். சீக்கிரம் ஓடு. ஓடிடு!

**நாகம்மா :** என்னமோ...நான் ஓடிடுறேன்மா...(அவள் ஓடுகிருள். கோமளா சிரிக்கிருள். வடிவேலன் பின்னுல் வந்து நின்று கொண்டு மௌனமாகப் பார்க்கிருர்)

வடிவேலன் : கோமளா! இப்படி உட்காரு. ரொம்ப களைப்பா இருக்குற! ஸ்டிராங்கா டீ போட்டுகிட்டு வர்ரேன். சோபாவுல உட்கார்ந்து ரெஸ்ட் எடுத்துக்கோ.

கோமளா : உங்க இரக்கமான மனசுக்கும், அன்பான பேச்சுக்கும் ரொம்ப நன்றி. நான் தனியா இருக்கணும்னு ஆசைப்படறேன், நீங்க போகலாம்!

வடிவேலன் : நான் சொன்னதையே திருப்பி சொல்றியா! செய்ததையே திருப்பி செஞ்சா, உலகம் தாங்காது. கோமளா! மன்னிக்கணும், மறக்கணும்னு பெரியவங்க சொன்னதை செய்து காட்டணும்னு நினைக்கறேன். மன்னிக்க முடியுது. மறக்கத்தான் முடியலே! என்னால மறக்க முடிஞ்சாலும், என்னுடைய லட்சியம் எல்லாம் சுக்கு நூறு உடைஞ்சுபோறதை சகிச்சுக்க முடியலே. அதுனாலதான் இந்த மௌன விரதம்.

கோமளா : நீங்க சாதிச்சது போதும். தயவு செய்து என்ன நடந்ததுன்னு சொல்லுங்களேன்.

வடிவேலன் : கோமளா...நான் ரொம்ப சீரியஸா கேட்கப் போறேன். ஏன் எதற்குன்னு கேள்வி கேட்காம பதில் சொல்லணும். நான் என்ன உத்தியோகம் பார்க்குறேன்னு உனக்குத் தெரியுமா?

கோமளா : என்னங்க...20 வருஷமா உங்க கூட நான் வாழறேன்...இப்படி ஒரு கேள்வியை கேட்குறீங்களே!...நான் என்னமோ ஏதோன்னு பயந்துகிட்டு இருக்குறேன்.

வடிவேலன் : நான் சொல்றதை நீ புரிஞ்சுக்கலே... கோமளா...என் கேள்விக்குப் பதில்தான் வேணும். விமர்சனம் இல்லே! புரியுதா!

**கோமளா:** புரியுதுங்க. உங்க உத்தியோகத்துமேல வச்சிருக்கிற அபிமானம் என்மேல் கூட இல்லேங்கிறது எனக்கும் நல்லா தெரியுங்க.

**வடிவேலன் :** 20 வருஷத்துக்கு முன்னுலே நான் நினைச்சிருந்தா, பெரிய பெரிய உத்தியோகத்துக்கு போயிருக்கலாம். வெளிநாட்டுக் கம்பெனியில ஆயிரம் ரூபா சம்பளத்துல மானேஜர் பதவி கொடுத்தாங்க...வேண்டாம்னு மறுத்துட்டேன். ஆயிரம் கோயிலை கட்டுறதைவிட, ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் உயர்ந்ததுன்னு பாடினுரே பாரதி! அப்படிப்பட்ட ஆசிரியர் உத்தியோகத்துக்குக் கூட நான் போக விரும்பலே. நான் பெரிய ஸ்போர்ட்மேன்னு சொல்லி எங்க அப்பா போலீஸ் டிபார்ட்மெண்டுக்குப் போகனும்னு ஆசைப்பட்டாரு! அதுக்கும் நான் போகலே.

**கோமளா:** எல்லாவற்றையும் வேண்டாம்னுசொல்லிட்டு, நீங்க விரும்பின வேலைக்கே போனீங்க. அதையே உயிரா நினைச்சுகிட்டு இருக்கிறிங்க! எனக்கு எல்லாம் தெரியுங்க.

**வடிவேலன் :** என்னையே நான் தியாகம்பண்ணிகிட்டு, என் லட்சியத்துக்காக வாழ்ந்துகிட்டு சந்தோஷமா இருந்தேன். ஆனு, என் இரத்தமே எனக்கெதிரா மாறிப்போற மாதிரி, நம்ப பிள்ளையே எனக்கு எதிரா நடக்கும் போது... நான் என்னத்தை சொல்றது?

**கோமளா :** என்னங்க! அவன் என்ன பண்ணிட்டான்னு சீக்கிரமா சொல்லுங்க.

**வடிவேலன் :** கோமளா! நான் ஆபீஸ்விட்டு வர்ற வழியில நண்பர் நாகராஜனைப் பார்த்தேன். அவர்

வீட்டு நாய் தான், உனக்கு நல்லா தெரியுமே! நீச்சல் குளத்துல நம்ம மோகன் நீச்சல் பழகிக்கிட்டு இருந்த சமயத்துல, தவறிப்போய் தண்ணீருக்கு அடியிலே போய்ட்டபோது, நாகராஜன் வீட்டு நாய் தானே மோகனை காப்பாத்தியது.

**கோமளா:** ஒருநாள் பால் ஊத்துறேம்ங்குற நினைவில, அந்த நாய் எவ்வளவு நன்றியோட உதவி செஞ்சுது பார்த்தீங்களா? நம்ம குலதெய்வமே அந்த நாயை அனுப்பித்தாங்க மோகனை காப்பாத்தியிருக்கு. அடிக்கடி அதைபோய் நான் பார்த்துட்டு, பிஸ்கட். தந்துட்டு வர்றதும் உண்டுங்க.

**வடிவேலன் :** அந்த நாயைத்தான் நம்ம மோகன் கல்லெடுத்து அடிச்சு, காலை முறிச்சிருக்கான். நாகராஜனும் வந்து என்கிட்ட சொல்லிட்டுப் போனாரு. அதை கேட்டதுலயிருந்து என் மனசே சரியில்லே!

**கோமளா :** உங்க மனசு எனக்குத் தெரியாதுங்களா! நம்ம தலை தீபாவளின்னைக்கு முக்கியமான விஷேஷத்தைக்கூட ஒதுக்கித் தள்ளிட்டு, ஒரு மாடு ரோட்டுல அடிபட்டுக்கிடந்ததைக் கொண்டுபோய் பத்திரமா ஆஸ்பத்திரியில சேர்த்து, கடைசிவரையிலும் இருந்து உதவி பண்ணுன உங்க மனசைப் பத்தி, எனக்குத் தெரியாதுங்களா?

**வடிவேலன் :** மாட்டை காலொடிச்ச அந்த டிரைவருக்குத் தண்டனை வாங்கித் தந்துட்டேன். நாயோடு காலை ஒடிச்ச என் பையனுக்கு ஒண்ணும் தரமுடியலியே! (அங்குமிங்கும் நடந்தபடி) என்கிட்ட மட்டும் அவன் கிடைக்கட்டும்... என்ன செய்யறேன் பாரு!

(மோகன் உள்ளே... 'அம்மா' என்று அலறிக்கொண்டு வந்து, அம்மாவின் காலில் விழுகிறான்)

**மோகன் :** அம்மா...என்னை மன்னிச்சுடுங்க...நான் பெரிய தப்பு பண்ணிட்டேம்மா...தெரியாம பண்ணிட்டேம்மா...

**கோமளா :** தெரியாம என்னடா .. தெரிஞ்சே பண்ணியிருக்கே! பிராணிகளைக் கண்டா கல்லெறிஞ்சு காயப்படுத்தறது உன் வேலை. பூச்சிகளைக் கண்டா பிடிச்சுக் கொல்றது உன் பழக்கம். பறவைகளைப் பிடிச்சு சிரத்வதை பண்றதுதான் உனக்கு சந்தோஷம். போ!... எங்களை வேதனையில துடிக்க வைக்கணுங்கறது தான் உனக்கு ஆசைன்னு, இன்னும் செய். தப்புன்னு சொல்லிட்டு திரும்பத் திரும்ப வந்து ஏமாத்தாதே...

**மோகன் :** ஏமாத்துலேம்மா...சத்தியமா சொல்றேன் .. இனிமேல் பிராணிகள்மேல கல் எறியமாட்டேம்மா.. காயப்படுத்த மாட்டேம்மா ... உங்களை யெல்லாம் கண்கலங்க வைக்கமாட்டேம்மா...

**வடிவேலன் :** நீ சொல்றதை கேட்க நல்லா இருக்குதுடா! ஆனா நீ செய்யுறதெல்லாம் ஏறுக்கு மாறுதானே இருக்குது! உன்னை அடிச்சு திருத்தக் கூடாது, அன்பால திருத்தணும்னு நினைச்சேன். எங்களுக்கு அன்பேயில்லாத மகனா எப்படிடா வந்து பொறந்தே! கடவுளே...! ஏன் இப்படி எங்களை சோதனை பண்றே.

**மோகன் :** அப்பா நான் என்ன சொன்னாலும்...நீங்க நம்பப் போறதில்லே. நீங்க மிருகத்துக்கிட்ட, வாயில்லாத ஜீவன்கள் கிட்ட நிறையா அன்பு காட்டுறிங்க. ஆனா, நானோ வெறுப்பைத்தான் காட்டுனேன். வேதனையைத்தான் உண்டாக்குனேன். ஆனா, இப்ப திருந்திட்டேன்.

**வடிவேலன் :** என்னடா சொல்றே...உண்மையாவா?

**கோமளா :** ஏண்டா...நாகராஜன் ஐயாவோட வீட்டு நாயை அடிச்சு, காலை முறிச்சிருக்கிறியே. அது உனக்கு என்ன பாவம் செய்தது? நீச்சல் குளத்துல மூழ்கப்போன ஒன்னை, ஓடிவந்து காப்பாத்தித் தூக்கி வந்ததே! அதற்கு பிரதியுபகாரமா காலை ஒடிச்சியா... ரொம்ப நல்லா இருக்குதுடா.

**மோகன் :** அம்மா! அப்பா... தயவு செய்து நான் சொல்றதை ஒருநிமிஷம் கேளுங்கப்பா.பள்ளிக் கூடத்துல இருந்து நண்பர்களோடு வந்துகிட்டே இருந்தேன். சந்தோஷமா பேசிக்கிட்டே வரும்போது அந்த நாய் எதிரே வந்தது. எந்த நாய் எதுன்னு கவனிக்காம வழக்கம்போல கல்லெடுத்து எறிஞ்சேன். கால்ல அடிபட்டு, நொண்டிநொண்டி கத்திக்கிட்டே அந்த நாய் ஓடிடுச்சு. என் நண்பர்கள் எல்லோரும், நான் குறிதப்பாம அடிச்சேன்னு பாராட்டுனுங்க. அங்கே போனதும், என்னைக் காப்பாத்துன நாயைத்தான் நான் அடிச்சேன்னு தெரிஞ்சதும், பதறிப்போய் ஆஸ்பத்திரிக்கு ஓடினேன்.

ஆஸ்பத்தியில என்னைப் பார்த்ததும் அந்த நாய் குலைக்கலேம்மா...கடிக்க வரலேம்மா...என்னை அன்பா பார்த்தது. பயம் தெளிஞ்சு நான் பக்கத்துல போய் தடவிக் கொடுத்தேன். அது நாவால தடவி என் கைமேல தலைவச்சு படுத்துகிடுச்சும்மா..காலை ஒடிச்ச என்னை கடிக்கலேம்மா..! என்னை நண்பனு பாவிச்சு..தலைவச்சுப்படுத்ததைப் பார்த்ததும் எனக்கு ரொம்ப அவமானமா போயிடுச்சு. இனிமே எந்த மிருகத்துக்கும் துன்பம் தர்ரதில்லேன்னு முடிவு பண்ணிட்டேன். அந்த நாய் என் நண்பன்ம்மா...என் ஆருயிர் தோழன்.

அதுமட்டுமில்லம்மா... பிராணிகள் எல்லாமே எனக்கு தோழன் தாம்மா...

**வடிவேலன் :** உண்மையாவாப்பா! இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யக்கால், என்ன பயத்ததோ சால் புன்னு, மனுஷனுக்கு வள்ளுவர் பாடினூர். ஆனு, அந்த நாய் செஞ்சதைப் பார்த்தியாப்பா...மோகன்! என்னோட 20 வருஷ இந்த எஸ். பி. சி. ஏ. இன்ஸ் பெக்டர் உத்தியோகத்துல, இன்னைக்குத்தாம்பா நான் ரொம்ப சந்தோஷமா இருக்குறேன்!

**மோகன் :** அப்பா இன்னொரு சேதி! நான் படிச்சு முடிச்ச பிறகு, உங்களை மாதிரியே பிராணிகளைக் காக்கிற இன்ஸ்பெக்டர் உத்தியோகம்தான் பார்க்கப் போறேன்.

**கோமளா :** மோகன்...கேட்க ரொம்ப மகிழ்ச்சியா இருக்குப்பா...என்னங்க...கேட்டீங்களா...என் கவலை யெல்லாம் தீர்ந்து போச்சுங்க...

**வடிவேலன் :** ஒன் கவலை இல்லே...நம்ம கவலை...இனிமே என்ன கவலை இருக்கு...போய் அந்த ஜீவனுக்கு நன்றி சொல்லலாம்! வாங்க போகலாம்.

**மோகன் :** அது ஜீவன் இல்லேப்பா...என் தோழன்...

(சிரிக்கின்றனர்)

REFERENCE
CONNEMARA PUBLIC LIBRARY
- 5 MAR 1985
MADRAS